உ

கொக்குவில்

# கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி

## கோயில் (புதுக்கோயில்)



10 - 4 - 98ல் நடைபெற்ற

மஹா கும்பாபிஷேக விழாவை

முன்னிட்டு வெளியிடப்பட்ட

# சிறப்பு மலர்

1998

# அறிமுகவுரை

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்

துணைவேந்தர்.

பேராசிரியர்களே, விரிவுரையாளர்களே, மாணவர்களே வணக்கம்.

இன்று நாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புலமைசார் நிகழ்ச்சிகளுள் ஒன்றான 'தொடக்கப் பேருரை' யின் பொருட்டு இங்கு குழுமியுள்ளோம். இன்று பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் நிகழ்த்தவிருக்கும் 'தொடக்கப் பேருரை' க்குத் தலைமை தாங்குவது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தொடக்கப்பேருரை நிகழ்ச்சியில் இது எட்டாவது நிகழ்ச்சியாகும். இன்று இவர் "தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்" என்னும் பொருள்பற்றிய தமது தொடக்கப்பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

பேராசிரியர் வேலுப்பிள்ளை தமது ஆரம்பக் கல்வியைப் பருத்தித்துறையிலுள்ள வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்று, 1955 ல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றார். பல்கலைக் கழகத்திற் சேர்ந்த இவர் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று 1959 ல் முதல் வகுப்பில் சித்தியடைந்தார். பல்கலைக்கழகத்தில் இவருக்கு ஆறுமுகநாவலர் பரிசு, கீழைத்தேயக் கல்விப் புலமைப்பரிசு, அரசாங்கப் புலமைப் பரிசு என்பன வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

1961 ஆம் ஆண்டில் இலங்கைச் சிவில் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதிலும், பல்கலைக்கழகக் கல்விசார்பணியில் இவர் பெரிதும் நாட்டங்கொண்டிருந்தமையினால், அப்பதவியை ஏற்காது, தமிழ்ப்பற்றின் காரணமாகப் பல்கலைக்கழகச் சேவையிலே கடமையாற்றலானார். அப்போது பல்கலைக்கழகத்திற் பேராசிரியராகவிருந்த கணபதிப்பிள்ளை அவர்களிடம் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு 1962 ல் கலாநிதிப் பட்டம் பெற்றார். இதுவே இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் தமிழ்த்துறையிலே முதன்முதலாக வழங்கப்பட்ட கலாநிதிப் பட்டமென்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தமது ஆய்வினை ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திற் பணிபுரிந்த பேராசிரியர் பரோ என்பவரிடம் தொடர்ந்து நடாத்தி அப் பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப்பட்டம் பெற்றார்.

இவர் மைசூரிலுள்ள அரசாங்க சாசனவியற்றுறையிற் சாசனவியற் பயிற்சி பெற்றார். திராவிடமொழியியற் கழக சிரேஷ்ட ஆய்வாளர், சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் சிறப்புநிலைப் பேராசிரியர், எடின்பரோ பல்கலைக்கழக மொழியியற்றுறையிலே பொதுநல அமைப்புக் கல்விசார் ஆராய்ச்சியாளர் என்பன இவர் வகித்த பதவிகளுட் சிறப்பாகக் குறிப்பிடவேண்டியனவாகும்.

1976 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே இணைப் பேராசிரியராக நியமனம் பெற்ற இவர் 1977 முதல் 1983 வரை தமிழ்த் துறைத் தலைவராக அப்பல்கலைக்கழகத்திற் கடமையாற்றினர்.

ஆங்கிலம் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பலநூல்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார். சாசனம், இலக்கணம், மொழியியல், இலக்கியம், சமயம் என்பன தொடர்பாக ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார். இந்நூல்களுட் சில இந்தியப் பல்கலைக்கழகங்களிற் பாடநூல்களாகப் பரிந்துரை செய்யப்பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன. செங்கோசெலவாக்கியா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வெளிவரும் சர்வதேச சஞ்சிகைகளிற் கட்டுரைகள் வெளியிட்டதோடமையாது, அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக் கருத்தரங்குகளிலும் கட்டுரைகள் படிக்கப்பட்டு, மகாநாட்டு ஆராய்ச்சித் தொகுதிகளிலே இவரின் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மொழியியல், தமிழியல் தொடர்பாக இவருக்குள்ள ஈடுபாடு திருவனந்தபுரத்திலுள்ள திராவிடமொழியியற் கழக ஆயுட்கால உறுப்பினராகவும், சென்னைத் தமிழியற் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் இந்திய மொழியியற் கழகத்தினதும் சாசனவியற் கழகத்தினதும் உறுப்பினராகவும் இருப்பதிலிருந்து நன்கு புலப்படும்,

தமிழ் வரலாற்றிலக்கணம், தமிழிலக்கியத்திற் காலமுங்கருத்தும், சாசனமும் தமிழும், தமிழர்சமய வரலாறு, Study of Dialects in Inscriptional Tamil, Epigraphical Evidences for Tamil Studies. என்பன இவர் எழுதிய நூல்களுட் சிலவாகும், இவற்றுள் Study of Dialects in Inscriptional Tamil திராவிட மொழியியற் கழகத்தினலும் Epigraphical Evidences for Tamil Studies உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தாலும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்புக்குரியவரான பேராசிரியர் வேலுப்பிள்ளை 1984 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்றுர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கைத் தமிழ்ச் சாசனங்களைப் புதிய பதிப்பாகக் கொண்டு வரும் முயற்சியில் இவர் ஈடுபட்டுள்ளார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தின் மரபுக்கமைய அவர் இன்று ஆற்ற இருக்கும் தொடக்கப் பேருரை "தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்" என்னும் பொருள் பற்றியதாகும், அவரை அவரது தொடக்கப் பேருரையை நிகழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

# தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குக் குறையாத, தொடர்ச்சி குன்றாத தமிழ் இலக்கிய வரலாற்றுப் பின்னணியிலே ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை வைத்துப் பார்க்கும் போது, ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு மிகவும் தொய்ந்து காணப்படுகிறது. பொதுவான தமிழிலக்கிய வரலாறு பற்றிய நூல்கள் பல வெளிவந்துள்ளன. இலங்கைத் தமிழிலக்கிய வரலாறு என்று ஒருநூல் இன்னும் வெளிவரவில்லை. இலங்கைத் தமிழிலக்கிய வரலாறு என்பது ஒரு தனிப்பாடநெறியாக, அண்மைக் காலத்திலிருந்தே இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளில் இடம்பெற்று வருகின்றது. ஈழத்துத் தமிழிலக்கியம் பற்றி இதுவரை வெளிவந்துள்ள நூல்களிலே விதந்து குறிப்பிடக்கூடிய ஆக்கம் கலாநிதி க. செ. நடராசா வெளியிட்டுள்ள ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சி (1982) என்பதாகும். இந்தநூல் 14 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரையிலான வளர்ச்சியை எடுத்துக் காட்டுமுகத்தால், ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்க காலத்தைக் கூறுவதாக ஆசிரியர் கூறியுள்ளார். வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையிலே நூலாசிரியர் நடராசாவின் கருத்துக்கள் சிலவற்றை ஆராய்வதே இவ் விரிவுரையின் நோக்கமாகும்.

நடராசா சோதிட, வைத்திய நூல்களின் தோற்றம் பற்றிக்கொண்ட பார்வை ஆழம்பெற வேண்டும் 14 ஆம் நூற்றாண்டு வரையிலே தமிழ்க்கல்வெட்டுச் சான்றுகொண்டு தமிழர் குடியிருப்புப் பற்றியும் தமிழ்ச் செய்யுள் மரபின் வழக்காறு பற்றியும் ஆசிரியர் கொண்ட கருத்து விரிவுபெறவேண்டும். ஈழத்துப் பூதந்தேவனாரை ஒதுக்கியமை கைவிடப்படவேண்டும்.

## சோதிட, வைத்திய நூல்களின் தோற்றம்

நூலின் முடிபுரையிலே, நடராசா தெரிவிக்கும் கருத்து வருமாறு:-

"ஆரம்பகால ஈழத் தமிழிலக்கியங்களை நோக்குமிடத்து, அவை வடக்குத் தெற்கு என்ற பாகுபாடின்றி, ஆங்காங்குள்ள அரசர்களின் ஆதரவிலேயே வளர்ந்திருக்கின்றன என்று காணலாம். அத்தகைய நூல்கள் சில அவற்றைச் செய்வித்த அரசர் பெயராலே வழங்கிவருவதும் அதற்குச் சான்றாகும். அக்கால இலங்கை அரசர்கள் சோதிடத்திலும் வைத்தியத்திலும் முக்கிய கவனஞ் செலுத்தியிருக்கிறார்களென்பது அவர்கள் செய்வித்த ஆதி நூல்களைக் கொண்டு அறியலாம். அப்பொழுதிருந்த நிலைபேறற்ற அரசியல் நிலைமை அதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். எவ்வாறாயினும், சோதிடத்திலே ஈழத்தமிழ் மன்னருக்கும் சிங்கள அரசர்களுக்கும் 14 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டிருந்த பெருநம்பிக்கையை அவர்கள் செய்வித்த சோதிட நூல்கள் பிரதிபலிக்கின்றன".

14 ஆம் நூற்றாண்டு அரசியல் வரலாற்றை நுணுகிநோக்கும் போது, மேற்படி பந்தியிலுள்ள கருத்துக்கள் சில தெளிவுறும். சிங்கள அரசின் வீழ்ச்சிக்காலம் 13 ஆம் நூற்றாண்டிலேயே ஆரம்பித்துவிட்டது. சோழப்பேரரசருக்குப் பயந்த காலம் போய், கலிங்கமாகனுக்கும் மலாய்ச் சந்திரபானுவுக்கும் பாண்டியப் பேரரசருக்கும் பயப்பட்டு வாழவேண்டிய நிலையிலே தம்பதேனியாவிலிருந்த சிங்கள அரசு இருந்தது. வடஇலங்கை பாண்டியப் பேரரசரின் தளபதியாக வந்த ஆரியச் சக்கரவர்த்தியினாலே ஆளப்பட்டு வந்தது (Pathmanathan, 1978). இந்தச் சூழ்நிலையிலே தம்பதேனியாவில் ஆட்சிபுரிந்த நான்காம் பராக்கிரமபாகுவுக்குச் சோதிடத்தில் அலாதி நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. சோதிடராக வந்து சேர்ந்த தமிழ்ப்புலவர் இலங்கையின் தென்முனையான தேவிநுவரையில் இருந்த பிரபல விஷ்ணு கோவிலின் அந்தணரான போசராசர் என்பவர். தேவிநுவரை என்பதே தேனுவரையென்று மருவியிருக்கிறது. தேவனுடைய நகர் என்று பொருள்படும் தேவிநுவரைக்கு, அப்பெயரேற்படக் காரணம் அங்கிருந்த விஷ்ணு கோவிலே. அக்கோவிற் பிராமணருக்கு நிலதானம் செய்ததைக் குறிக்கும் பராக்கிரமபாகுவின் நாய்மனத் தமிழ்க் கல்வெட்டு வெளிவந்துள்ளது. போர்த்துக்கேயர் காலத்திலே இக்கோயில் தரைமட்டமாகியது. பெருமாள் என்பது திருமாலுக்கு ஒரு நாமம். தேனுவரைப்பெருமாள் எனப்பட்ட போசராச பண்டிதர் ஒரு வீர வைணவர் என்பது சரசோதிமாலையின் கண்ணுள்ள அகச்சான்றுக்களாற் புலப்படுகிறது. விநாயகருக்கும் விஷ்ணுவுக்கும் மட்டுமே கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்; விநாயகரைத் திருமாலின் மருமகனென்றே வணங்குகிறார்; சோதிடப்புலமை எய்தத் திருமாலை வணங்கவேண்டுமென்கிறார்.

சிங்களப் பௌத்த மன்னனாகக் கணிக்கப்படும் பராக்கிரமபாகுவின் அரசவையிலே சரசோதிமாலை எப்படி அரங்கேறியது என்ற வினா எழுகிறது. பாண்டியர்களோடு போராடி வந்த பராக்கிரமபாகு தமிழின விரோதியாகச் செயற்படவில்லை; தன்னைச் சோழமரபினன் என்று கருதியிருக்கிறான். சரசோதிமாலைப் பாயிரம் மேருமலையிலே புலி இலச்சினையைப் பொறித்தவனெனவும் ஆத்திமாலையைச் சூடியவனெனவும் சூரியவம்சத்தவனெனவும் பராக்கிரமபாகுவைப் பாராட்டுகிறது. பாயிரம் அரங்கேறியபோது இதைக்கேட்டு மகிழும் நிலையிலே அரசவை இருந்திருக்கிறது. போசராசர் சிங்களமொழி தெரியாதவராக இருந்திருக்கக் கூடும். அவருடைய சோதிடப்புலமையை நூலுருவாக்கி வைக்க அரசன் விரும்பியிருந்திருக்கக்கூடும். இவர் தேனுவரையிலே வாழ்ந்தமையால், அங்கும் அக்காலத்திலே தமிழ்க்குடிகள் இருந்தன என்று நடராசா முடிவு கட்டியுள்ளார். இன்று அப்பகுதியிலே தமிழ்க் குடிகள் இல்லை. திக்குவெலை என்ற முஸ்லீம் கிராமம் இருக்கிறது. தமிழில் ஆக்க இலக்கியம் படைக்கும் முஸ்லீம்கள் அங்கு வாழ்கின்றனர்.

சரசோதிமாலை அரங்கேறிய காலம் கி. பி. 1310. இந்த ஆண்டு பாண்டியப் பேரரசு திடீரென வீழ்ச்சியடைகிறது. அரசுரிமைக்காக இரண்டு இளவரசர்களிடையே பாண்டிய நாட்டில் உள்நாட்டுப்போர் தொடங்குகிறது. தமிழ்நாடெங்கும் பேரழிவு ஏற்படுகிறது. தமிழரசர்களால் தலைதூக்கவே முடியவில்லை. சில ஆண்டுகளுக்குள் மதுரையில் முஸ்லீம் ஆட்சி ஏற்படுகிறது. 14 ஆம் நூற்றாண்டு இறுதிக்குள் தமிழ்நாடு விசயநகரப் பேரரசுக்குள் அடங்குகிறது. தமிழ்நாட்டிலே குழப்பம் மிகுந்தது; அன்னியர் கெடுபிடிகள் அதிகரித்தன. கோவில்கள் எரிக்கப்பட்டன அல்லது கொள்ளையடிக்கப்பட்டன; நிலங்கள் பறிபோகின (Nilakanta Sastri, 1955). இந்தக்காலத்திலே, தமிழ்மக்கள், சிறப்பாக மேல்மட்டத்திலிருந்த

தமிழ்மக்கள் நாட்டிலிருந்து வெளியேறி இலங்கையிலே குடிபுகுந்திருக்க வேண்டும். வடஇலங்கையிலிருந்த ஆரியச்சக்கரவர்த்தி பாண்டியப் பேரரசின் வீழ்ச்சியைப் பயன்படுத்தித் தனியரசு செய்யத் தொடங்கியிருக்க வேண்டும்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் சிம்மாசனப் பெயர்களான செகராசசேகரன், பரராசசேகரன் என்பன சோதிட நூலுக்கும் வைத்திய நூல்களுக்கும் வழங்கியமையின் முக்கியத்துவம் இன்னும் தேவையான அளவு அழுத்திக் கூறப்படவில்லை. ஆக்குவித்தோனுகிய அரசனுடைய பெயர் ஆக்கத்தின் பெயராக அமையும்போது அரசனுடைய பிரத்தியேகமான ஆதரவு அந்த ஆக்கத்துக்கு உண்டு என்பதே அதன் பொருள். சோழப்பெருமன்னர் காலத்தில் இந்த மரபு நிலவி வந்ததற்குப் பல சான்றுகள் காட்டலாம். 14 ஆம் நூற்றுண்டு முற்பகுதியிலே செகராசசேகரமாலை என்ற சோதிடநூலை ஆக்குவித்த வரோதைய சிங்கையாரியனும் வாழ்ந்திருக்கிருன்.

செகராசசேகரமாலையின் பதிப்பாசிரியராகிய இரகுநாதையர் (1942) இவ்விரு சோதிடநூல்களுக்குமுள்ள தொடர்பு பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார். "இவ்விரு நூலுள் ஒன்று மற்றென்றைக் கண்டபின்னரே அதனிலுஞ் சிறப்பாக விளங்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்...... முந்திய படலங்களில் சரசோதிமாலையிற் சுருக்கமாகக் கூறப்பட்ட பல விஷயங்கள் செகராசசேகரமாலையில் விரிவாக விளக்கப்பட்டமையாலும், அதிற்கூறப்படாத சில விஷயங்கள் இதிற் புதிதாகச் சேர்க்கப்பட்டமையாலும் செகராசசேகரமாலையே பிந்திச் செய்யப்பட்டதென்பது தெளிவாகிறது."

சரசோதிமாலையைத் திருத்தியும் புதுக்கியும் செகராசசேகரமாலை வெகுவிரைவில் தோன்றிய சூழ்நிலை ஆராயப்படவேண்டும். சரசோதிமாலையை அரங்கேற்றுவித்த பராக்கிரமபாகு நிம்மதியாக வாழவில்லை. பாண்டியப்பேரரசின் வீழ்ச்சி அவனுக்கு நன்மையாக முடியவில்லை. தனியரசு அமைத்துக்கொண்ட வரோதைய சிங்கையாரியனின் தாக்குதல்களை அவனுலே சமாளிக்க முடியவில்லை. அவனுக்கு வேறு உட்பகையும் இருந்துவந்தது. தன்னுடைய தலைநகரை மலையரண்கள் நன்கு வாய்க்கப் பெற்ற குருநாகலுக்கு மாற்றிப் பார்த்தான். அம்மன்னன் சில ஆண்டுகளின் பின் படுகொலை செய்யப்பட்டான். அந்தச் சூழ்நிலையிலே, சரசோதிமாலையிலே மக்கள் நம்பிக்கை தளர்ந்திருக்கும்.

இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்துவெளியின் வரலாற்றுக்கு முந்திய நாகரிகம் என்ற பெயரில் K .N. Dikshit (1973) என்பவர் அண்மைக் காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தினூடாக வெளியிட்ட நூலொன்றிற் காணப்படும் கருத்தொன்றை நோக்கலாம் :-

> "The cities (of the Indus Valley Civilization) were inhabited by the intellectual class of people like Physicians and Astrologers."

இந்துவெளியின் வரலாற்றுக்குமுந்திய நாகரிகம் திராவிடருக்குரியது என்ற கருத்து இன்று வலுப்பட்டு வருகிறது. அப்படியானல், கி. மு. 2000, 3000 ஆண்டுகளிலே

திராவிடர் வைத்தியர்களாகவும் சோதிடர்களாகவும் பிரபலம் பெற்றுவிளங்கினர். கி. பி. 14 ஆம் நூற்றுண்டிலே, ஈழத்திலே தமிழ் நூல்கள் தோன்றத் தொடங்கிய போது வைத்திய நூல்களும் சோதிட நூல்களுமே முக்கியமானவையாகத் தோன்றுவது திராவிடப்பண்பாட்டுக்கு இயைபானதாகக் காணப்படுவது வியப்பாக இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து இலங்கையில் வந்து குடியேறிய மக்களுள் ஒருபகுதியினருக்குச் சோதிடமும் வைத்தியமும் தொழில்களாக இருந்திருக்கக்கூடும். சிங்களவர் இலங்கையிலே விசயன் தலைமையில் வந்து முதலிலே குடியேறினரெனக்கூறும் மகாவம்சம், அதே விசயன் காலததிலேயே மதுரையிலிருந்து பல்வேறு வகைத் தொழிலாளர்களும் இலங்கையிலே குடியேறியதை உடன்படுகிறது. இலங்கையிலே எப்பொழுதும் செல்வாக்குப் பெற்று விளங்கிய பிராமணர்களுள்ளே தமிழ்ப் பிராமணர்களும் இருந்திருக்கக்கூடும். தமிழர்கள் இலங்கையிலே மிகநீண்டகாலமாகப் போர்வீரர்களாகவும் வியாபாரிகளாகவும் விளங்கியதற்குப் பல வரலாற்றுச் சான்றுகளுள்ளன. 13, 14, ஆம் நூற்றுண்டிலிருந்து சோதிடம், வைத்தியம் முதலிய புதிய தொழில்களிலும் தமிழர்கள் இறங்குகின்றனர் இலங்கைத் தமிழர் சமுதாய வரலாற்றிலே (Social History). இது முக்கியமான மாற்றமாகும். செகராசசேகர மாலை அரசனுடைய பெயரால் அரசமுத்திரை குத்தப்பட்ட சோதிடமுறையை அறிமுகஞ்செய்து தொழிலைப் பாதுகாக்க எழுந்த நூல் என்று கூறலாம். முதலாவதுநூல் சரசோதிமாலை என்ற பெயர்பெற இரண்டாவது நூல் செகராசசேகரமாலை என்று பெயர் பெற்றுள்ளது. வடமொழிச் சோதிட முதனூலாசிரியர்களின் பெயர்கள் செகராசசேகரமாலையில் மட்டுமே கூறப்பட்டுள்ளன. நூலாசிரியராகிய சோமசன்மா திருமாலையும் வழிபடும் சைவசமயத்தவர் போலக் காணப்படுகின்றார்.

செகராசசேகரமாலை தோன்றிய வரோதையசிங்கையாரியன் காலத்திலேயே செகராசசேகரம் என்ற வைத்திய நூலும் தோன்றியிருக்கிறது. சோதிடத்துக்கு ஒரு தராதர நூலைத்தர முற்பட்டதுபோல, வைத்தியத்துக்கும் ஒரு தராதர நூலைத்தர வரோதையன் முயன்றிருக்கிறன். செகராசசேகரம் என்ற வைத்திய நூலின் ஆசிரியர் பெயர் தெரியவரவில்லை. சரசோதிமாலைக்கு மூல வடநூலாசிரியர் பெயர் குறிப்பிடாதது போல, செகராசசேரத்துக்கும் குறிப்பிடப்பட்டிருக்காது என்று கருதினேன். செகராசசேகரத்தின் மூல வடநூலாசிரியன் 'வேதங்கடந்த மாமுனிவன்' என்று செகராசசேகரம் முதற் செய்யுள் கூறுவதாக, நடராசா குறிப்பிட்டுள்ளார். 'வேதங்கடந்த மாமுனிவன்' என்று எவருக்கும் பெயரில்லை. ஆயுள்வேத வைத்தியத்தின் தோற்றம் பற்றிய மரபு, சிறிதளவு இலக்கண அறிவு இவை இரண்டும் ஒன்றுசேர இருந்தால், மர்மம் தெளிவாகும். சித்த வைத்தியத்தைச் சிவபெருமான் உபதேசித்தாரென்பது போல, பிரமதேவனே ஆயுள்வேதத்தை உபதேசித்தாரென்பது ஐதீகம். வேதங்களைத் தோற்றுவித்தவனும் பிரமனே என்பது வைதிக மரபு. எனவே 'வேதங்கடத்த மாமுனிவன்' என்பது 'வேதங்கள் தந்த மாமுனிவன்' என்று பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டுப் பிரமதேவனைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். முதனூல் ஒன்று இருக்கும்போது அதனைத் திருத்தியும் புதுக்கியும் வெளியிடுவது சுலபம்; புதிதாகத் தராதரமான முதனூலை ஆக்குவது சிரமம். வைத்தியநூல் ஆக்கத்திலே செகராசசேகரத்துக்குப்பின் பரராசசேகரம் தோன்ற வேண்டி ஏற்படுகிறது. நடராசாவின் கூற்று வருமாறு :-

> "பரராசசேகரத்தை விடச் செகராசசேகரம் காலத்தாற் சிறிது முற்பட்டதென்பதற்குச் சில ஆதாரங்களைக் காட்டலாம். செகராசசேகரத்தோடு நோக்குமிடத்துப் பரராசசேகரம் பாரியநூலாகும். செகராசசேகரத்திற் சொல்லப்பட்டனவும் சொல்லப்படாத பலவும் பரராசசே

கரத்திற் சொல்லப் படுகின்றன. செகராசசேகரம் செய்யப்பட்ட பின்னர் அதனைக் கண்ணுற்ற ஒருவரே செகராசசேகரத்தின் குறைபாடுகளை நோக்கிப் பரராசசேகரத்தைச் செய்திருக்க வேண்டும்.''

பரராசசேகரம் அளவு பாரியநூல் எதுவும் இலங்கைத் தமிழில் வேறு இல்லை; 12000 செய்யுள்கள் இருந்தனவென்றால், இந்தியத் தமிழில் வேறு உண்டா என்பதும் ஆராய்ச்சிக்குரிய விடயமாகும். பரராசசேகரம் என்பது எந்தச் சிங்கையாரியப் பரராசசேகரன் காலத்திலே பாடப்பட்டது என்பது தெரியவரவில்லை. 19 ஆம் நூற்றுண்டிலே இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் தொகுப்பித்த 'சித்த வைத்திய சங்கிரக'மும் தஞ்சை மாராட்டிய மன்னன் இரண்டாம் சரபோஜிதொகுப்பித்த 'சரபேந்திர வைத்திய முறைக'ளும் வைத்தியர்கள், புலவர்கள் பலரின் கூட்டு முயற்சிகளாக இருந்ததுபோல (Krishnan, 1984) பரராசசேகரம் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசவையிலே கூட்டு முயற்சியாக இருந்திருக்கக்கூடும். மேலும் கவனிக்க வேண்டியது, இருநூல்களும் வடமொழி ஆயுள்வே வைத்திய நூல்களின் தழுவல்களென்று பாயிரங்களிலேயே கூறப்பட்டிருக்கிறது. தமிழர்களுக்குச் சிறப்பாக உரிய சித்த மருத்துவம் அக்காலத் தமிழரிடையே பரவியிருந்திருக்கவில்லை என்று கொள்ளவேண்டியிருக்கிறது. பரராசசேகரப் பாயிரம் தன்வந்தரிவாகடத்தின் வழிநூலாக, அந்நூல் ஆக்கப்பட்டதாகக் கூறுகிறது. ஆயுள்வேத வைத்திய முதனூலாசிரியர்களுள் நிபுணர் ஒருவர் தன்வந்தரி; இன்னொருவர் வாக்படர்; வாக்படர் இயற்றியது வாகடம். வாகடம் என்ற காரணப்பெயர் பின்பு பாரம் பரிய வைத்திய நூல்களுக்குப் பொதுப்பெயராகிறது. Historical Semantics என்ற வரலாற்றுச் சொற்பொருளாய்வியலில் Extension என்னும் பொதுப்பெயராக்கத்துக்கு இது நல்ல உதாரணம். சித்த வைத்திய நூல்கள் இயற்றிய பதினெண் சித்தர்களுள் தன்வந்தரியும் ஒருவராகச் சிலர் கூறுவர். ஒரு சித்தருக்கு அப்படிப் பெயரிருந்திருந்தால், அவர் பிறர் ஒருவராக இருந்திருக்கக்கூடும்.

பரராசசேகரம் என்ற அரசமுத்திரை குத்தப்பட்ட விரிவான வைத்திய நூல் எழுந்தபின், தமிழ் வைத்தியர் நாடு முழுவதும் சென்று வைத்தியம் செய்யத்தக்க நிலைமை உருவாகியிருக்க வேண்டும். கண்டியரசன் தேவிக்கு ஏற்பட்ட வயிற்று நோயை அங்குள்ள வைத்தியர்களாலே தீர்க்கமுடியாது போக, ஆரியச் சக்கரவர்த்திகள் குலத்தவனுன பரநிருபசிங்கனை அழைத்துத் தீர்த்ததாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுவது தமிழருடைய வைத்தியத் திறமை தமிழருக்கு மட்டும் பயன்படவில்லை என்பதைக் காட்டுகிறது. தமிழ்நாட்டு மன்னர்கள் எவரும் சோதிடம், வைத்தியம் என்னும் துறைகளிலே 19 ஆம் நூற்றுண்டு வரையில் யாழ்ப்பாண மன்னர்கள் அளவு ஆர்வம் காட்டாதமை கவனிக்கத்தக்கது. சோதிடத்தின் மூன்று கூறுகளில் கணிதம் ஒரு கூறு. கணி என்ற சொல் பண்டைக்காலத்திலிருந்து சோதிடரைக் குறிக்க வழங்கிவந்துள்ளது. வைத்தியம் உயிரியல் விஞ்ஞானத்தோடு நெருங்கிய தொடர்புடையது. யாழ்ப்பாணத்தமிழர் இன்றும் போற்றிவரும் துறைகள் இவை. 19 ஆம் நூற்றுண்டில் மேனுட்டு முறையிலமைந்த மருத்துவ, கணித, விஞ்ஞான நூல்கள் தமிழில் முதன்முதல் யாழ்ப்பாணத்தில் எழுந்த பின்னணி இதுவே. அறிவு இலக்கியத்தைப் பேணுவதில், யாழ்ப்பாணத்துக்கு எழுநூற்றுண்டுப் பாரம்பரியம் உண்டு. யாழ்ப்பாண மன்னர் காலத்திலே வட இந்தியக் கலைச் செல்வங்களைப் பேணிய கல்விப்பாரம்பரியம், 19 ஆம் நூற்றுண்டிலிருந்து மேனுட்டுக் கலைச் செல்வங்களைப் பேணிவருகிறது.

## 14 ஆம் நூற்றுண்டு வரையிலான சாசனச்சான்றுகள்

நடராசாவின் நூலிற் காணப்படும் மேல்வரும் பகுதிகளும் கவனிக்கப்படவேண்டியன:-

" தமிழ் இலக்கிய மரபு கி. பி. 14 ஆம் நூற்றுண்டுக்கு முன்னரே ஈழத்தில் உயர்ந்த நிலையில் இருந்தது என்பதனைக் கல்வெட்டுச் செய்யுட் சான்றுகள் காட்டி நிக்கும்."

"அனுராதபுரத்தின் வட பாகத்திலே..... நாலுநாட்டார் கல்வெட்டு இதனை வலியுறுத்துவதாகும் ... இத்தகைய செய்யுள்வளம் கி. பி. 9 ஆம் 10 ஆம் நூற்றுண்டளவில் ஈழத்தே விருத்தியடைந்ததென்றுல், அதற்குச் சில நூற்றுண்டுகளின் முன்னரே அங்கு தமிழ் இலக்கியமரபு மலர்ச்சியுற்றிருக்க வேண்டும் என்பதுதெளிவு. அவ்வாறே கி. பி. 14 ஆம் நூற்றுண்டில் கோட்டகம என்னுமிடத்திற் பொறித்த...... வெண்பாவின் சிறப்பும் ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபின் தொடர்ச்சியான வளர்ச்சியினை நிலை நாட்டும்."

" ......ஆங்காங்கு வாழும் மக்களின் மொழியிலேயே கல்வெட்டுக்கள் பொறிக்கப்படுகின்றன. எனவே, கி. பி. 14 ஆம் நூற்றுண்டிற் கேகாலைப் பகுதியிலும் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்தனர் என்பது போதரும்."

நூலாசிரியர் கூற்றுக்கள் இரண்டு வகைகளிலே குன்றக்கூறலாக (Understatement) அமைந்துள்ளன. கல்வெட்டுச் செய்யுள்கள் சிலவற்றை எடுத்துக்காட்ட அவர் தவறியுள்ளார்; உரைநடையில் அமைந்துள்ள தமிழ்க்கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்களிலும் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்திருப்பர் என்பதனை அவர் உணர்ந்திருந்ததாகத் தெரியவில்லை.

நூலாசிரியர் எடுத்துக்காட்டிய செய்யுள்கள் இரண்டும் பலரும் பல இடங்களிலே எடுத்துக்காட்டியிருப்பவை.

### அனுராதபுரச் செய்யுள் (கி. பி. 9/10 நூற்றுண்டு)

போதி நிழலமர்ந்த புண்ணியன்போ லெவ்வுயிர்க்குந்
தீதி வருள்சுரக்குஞ் சிந்தையா — னுதி
வருதன்மங் குன்றுத மாதவன்மாக் கோதை
யொருதர்ம பாலனுளன்

### கோட்டகமச் செய்யுள் (கி. பி. 14 ஆம் நூற்றுண்டு)

கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினர் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் — பொங்கொலிநீர்ச்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்.

அனுராதபுரச் செய்யுள் வணிக கணம் ஒன்று பௌத்த விகாரை எடுப்பித்ததைக் குறிக்கும் சாசனத்தில், பௌத்தப் பெரியாரொருவரைப் பாராட்டுவதாக அமைந்துள்ளது. கோட்டகமச் செய்யுள் யாழ்ப்பாண அரசின் படைகள் கேகாலை

மாவட்டம்வரையிலே சென்று வெற்றியீட்டியதைக் குறிப்பிடுகிறது.

கி. பி. 12 ஆம் நூற்றுண்டுக்குரியதெனக் கொள்ளத்தக்க பதவியாக் கல்வெட்டிற் காணப்படும் இணைக்குறளாசிரியப்பாவையும் 12 ஆம் நூற்றுண்டு இறுதி அல்லது 13 ஆம் நூற்றுண்டுக்குரியதெனக் கொள்ளத்தக்க பண்டுவஸ்நுவரக் கல்வெட்டிற் காணப்படும் விருத்தப்பாவையும் நடராசா குறிக்கத்தவறியுள்ளார்.

**பதவியாச் செய்யுள்** (கி. பி. 12 ஆம் நூற்றுண்டு)

உத்தமர்தங் கோயில் வலகழி எனலும்
நித்தநியமம் நெறிவளர்
சித்தமுடன் சீரிளமை சேர்ந்த
பதியில் விளையாரம்ப பேரிளமையார்த்துகள்
போதா வாயிரங் கொண்டுரைப்பார் திரு
சூத்தமாக முயன்றான் முயன்ற திரு.

**பண்டுவஸ்நுவரச் செய்யுள்.** (கி. பி. 13 ஆம் நூற்றுண்டு)

தென்னிலங்கைக் கோன் பராக்ரமபாகு நிச்சங்கமல்லற் கியாண்டஞ்சிற்
தினகரன் சுறவி வணைந்தவத்தையிலுத்திரட்டாதி யேழ்பக்கம்
பொன்னவன் தின நற்சாதயோகத்தில் ஊர்தரு போதி மாதவர்தம்
பொற்பமர் கோயில் முனிவராலயந்தேனறந் திகழ் சாலேயுஞ் செயித்தம்
அன்னவை திகழ ஐவர்கண்டன் வனுபேரி இலங்கை அதிகாரி அலகுத புயன்
தென்பராக்ரமன் மேனைச்செனெவி நாதன் திருப்பியரன்
மன்னிய சிறப்பில் மலிதருமழகாற் பராக்ரம அதிகாரிப் பிரிவுன வளர்தர
அமைத்தான் ஸ்ரீபுர நகருள் மதிமான் பஞ்சரன் மகிழ்ந்தே.

சைவக் கோவிலைப்பாடும் ஈழத்து இலக்கியங்களுள், இன்று கிடைக்கும் ஈழத்தவராற் பாடப்பட்ட மிகத் தொன்மையான செய்யுளாகப் பதவியாச் செய்யுள் காணப்படுகிறது. பௌத்த நிறுவனங்கள் சிலஎடுக்கப்பட்டமையைக் கூறும் பண்டுவஸ்நுவரக் கல்வெட்டிலே சோதிடக் கலைச் சொற்கள் காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

திருகோணமலை, வவுனியா, அநுராதபுரம் முதலிய மாவட்டங்களின் எல்லையிலே பதவியா அமைந்துள்ளது. சரசோதிமாலை அரங்கேறிய தம்பதேனியாவுக்கு அண்மையிலே பண்டுவஸ்நுவரை காணப்படுகிறது. இலங்கைத் தமிழ்க் கல்வெட்டுக்களிலே வெண்பா மட்டுமன்றி ஏனைய செய்யுள் வகைகளும் காணப்பட்டதை இந்த எடுத்துக்காட்டுகள் புலப்படுத்தியிருக்கும். சோழப்பெருமன்னர்கள் இலங்கையை ஆண்டகாலத்திலே பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் சிலவற்றிலே அம்மன்னர்களைப் பற்றிய மெய்க்கீர்த்திச் செய்யுள்களும் இடம்பெற்றுள்ளன. அவை தமிழ் நாட்டிலே ஆக்கப்பட்ட செய்யுள்களாதலால், ஈழத்தமிழ் இலக்கிய மரபு பற்றிய ஆராய்ச்சிக்கு அவை முக்கியமானவையல்ல என்று சிலர் கருதலாம். சோழப் பெருமன்னர்களுடைய மெய்க்கீர்த்திகள் இலங்கையின் வடகீழ்த் திசையிலேயே காணப்படுகின்றன. திருகோணமலை, பதவியா, பொலொன்னருவை என்னுமிடங்களிலேயே

முதலாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தியிலிருந்து அதிராசேந்திரனுடைய மெய்க்கீர்த்திவரை காணப்படுகின்றன. மெய்க்கீர்த்தியின் செல்வாக்கிலேயே கோணேசர் கல்வெட்டுத் தோன்றியிருக்கவேண்டும். 'கல்வெட்டு' கிழக்குமாகாணத்துக்குச் சிறப்பாக உரிய ஓர் இலக்கிய வகையாகப் பரிணமிக்கிறது. பண்டைக்காலத் தமிழர் பண்பாட்டின் ஒரு கூறுகிய நடுகல் வழிபாட்டின் எச்சசொச்சமாக, இறந்தவர் நினைவஞ்சலியாகப் பாடும் 'கல்வெட்டு' வடமாகாணத்துக்கே சிறப்பாக உரியது. ஈழத்துக்கே சிறப்பாக உரிய இவ்விருவகைக் கல்வேட்டுகளில், கிழக்கு மாகாணக் கல்வெட்டுகள் பல்வேறுகுழுக்களின் பெருமை கூறுவனவாக, வரலாற்றமிசம் பொருந்தியனவாக, நிலைபேறுடையனவாகக் காணப்படுகின்றன; வடமாகாணக் கல்வெட்டுகள் நிலைபேறற்றவையாகக் காணப்படுகின்றன.

கி. பி. 9 ஆம் நூற்றுண்டுக்கும் கி. பி. 14 ஆம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்திலே, தமிழ்க் கல்வெட்டுகள் இலங்கையிலே காணப்படும் இடங்களைக் கொண்டு, தமிழர்கள் எவ்வெப் பகுதிகளிலே தொகையாக வாழ்ந்தார்களென்று ஆராய்வது சுவையானது. தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்படாத இடங்களில் தமிழர் குடியிருப்புகள் இருக்கவில்லை என்று முடிவுகட்ட முடியாது. கல்வெட்டுகள் காணப்படாததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திருகோணமலை மாவட்டத்திலே வெவ்வேறு பகுதிகளிலும் பல தமிழ்ச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட காலப்பகுதியிலே இலங்கையின் தலைநகர்கள் காணப்பட்ட வடமத்திய மாகாணத்தைச் சார்ந்த அனுராதபுரம், பொலொன்னறுவை மாவட்டங்களிலும் வடமேல் மாகாணத்தைச் சார்ந்த குருணுகல் மாவட்டத்திலும் பல தமிழ்க் கல்வெட்டுகளும் புத்தளம் மாவட்டத்தில் ஒரு தமிழ்க் கல்வெட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் மன்னர் மாவட்டத்திலும் தமிழ்க் கல்வெட்டுகள் வெளிப்பட்டுள்ளன. மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை மாவட்டம், மேல்மாகாணத்திலுள்ள களுத்துறை மாவட்டம், தென்மாகாணத்திலுள்ள காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்கள் என்பனவற்றிலும் ஒவ்வொரு தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடித்து வெளியிடப்பட்டுள்ளது.

## ஈழத்துப் பூதந்தேவனர்

இலங்கைத் தமிழ் இலக்கியம் சங்ககாலத்திலிருந்து வளர்ந்து வருவதாகக் கொள்ளும் மரபு காணப்படுகிறது. வெவ்வேறு காரணங்களைக்காட்டி, தொல்காப்பியர், முரஞ்சியூர் முடிநாகராயர், அம்மூவனர் முதலியோர் ஈழத்தவரெனச் சிலர் காட்ட முனைந்தனராயினும் இன்று இவர்களுடைய பெயர்களை வற்புறுத்துவோர் இலரென்றே கூறலாம். ஈழத்துப் பூதந்தேவனரின் பெயர் கணேசையருடைய புலவர் வரிசையிலே இடம்பெற்று இன்று பலரால் ஏற்கப்பட்டு வருகிறது.

ஈழத்துப் பூதந்தேவனரை இலங்கை நாட்டின் முதற்புலவராக ஏன் ஏற்க முடியாதென நடராசாவும் கலாநிதி பூலோகசிங்கமும் சில காரணங்களைக் காட்டியுள்ளனர். நடராசா காட்டியுள்ள கருத்துகள் வருமாறு:—

> "ஈழத்துப் பூதந்தேவனர்...... இலங்கையிற் பிறந்து வளர்ந்தவர் என்பதை நிருபிக்கும்வரை, அவர் பாடல்களை ஈழத்தமிழிலக்கிய வரிசையில் இணைத்துக் கூறமுடியுமா என்பது சந்தேகமே. அப்புலவர் பெயருக்கிட்டுள்ள அடைமொழியாய 'ஈழத்து' என்ற ஒருசொல்லை மட்டுங்கொண்டு, அவர் இலங்கையர்என்று சாதிப்பது தக்கதெனத் தோன்றவில்லை. ஈழவர் என்றஒருவகுப்பினர் கேரளநாட்டிலும்வாழ்ந்தனர் என அறியப்படுகிறது. அவர் வாழ்பதியும் ஈழமென வழங்கப்பட்டிருத்தல் சாலும்."

கலாநிதி பூலோகசிங்கம் (1974) காட்டியுள்ள கருத்துக்கள் வருமாறு:-

> "பூதன்றேவனார், ஈழத்துப் பூதன்றேவனார், மதுரை ஈழத்துப் பூதன்றேவனார் என்ற பெயர்களையுடையவர் மூவேந்தர் ஆட்சிக்காலத்திலே வாழ்ந்தமை குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்னும் தொகை நூல்களாற் புலனாகும். பூதன்றேவனார் இலங்கையைச் சேர்ந்தவரென்பதற்கு ஆதாரம் கிடைக்குமாறில்லை. எனவே அப்பெயரைத் தவிர்த்து நோக்குமிடத்து, ஏனைய இருபெயர்களுக்கு உரியவர் ஒருவரா அல்லது இருவரா என்று துணிவதற்கில்லை. இருபெயரும் ஒருவரையே சுட்டுவதாக ஈழத்துத் தமிழ்ப்புலவர் சரிதம் (1939) கண்ட புன்னாலைக்கட்டுவன் மகாவித்துவான் சி. கணேசய்யர் (1878 — 1958) முதலானோர் கருதினர், அவர்கள் கொண்ட கருத்தினை ஆதரிக்கும் சான்றுகள் சுட்டுவதற்கில்லை."

> "...... எனவே, இவ்விருபெயர்களில் வரும் ஈழம் என்னுஞ் சொல் இலங்கை நாட்டினைத்தான் குறிப்பிடுகின்றது என்று சித்தாந்தமாகக் கொள்ளத்தக்கதா என்பது சிந்திக்கத்தக்கது."

> "இந்நிலையிலே ஈழத்துப் பூதன்றேவனார் இலங்கையிலே எந்தவூரினர் என்று துணியவேண்டியது அவசியமாகத் தெரியவில்லை. 'கடல் கடந்த தமிழ்' என்ற கட்டுரையிலே (கல்கி, தீபாவளிமலர், 1960) சு. நடேசபிள்ளை பூதன் என்ற பெயர் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது வழங்கிவருவதாகும் என்று கூறியிருக்கிறார். இலங்கையிலே தமிழ் வழங்கும் வேறு பகுதிகளிலும் இப்பெயர் வழங்குதை அவர் எக்காரணம் பற்றியோ சுட்டவில்லை."

ஈழமென்பது கேரளத்தில் ஒருபகுதியாகலாம் என்பது நடராசாவின் ஊகம். ஈழவர் என்ற ஒருவகுப்பினர் கேரள நாட்டிலும் வாழ்ந்தனர் என்று நடராசா இறந்தகாலத்திற் கூறியிருக்கிறார். கேரளத்தில் இன்றும் வாழும் வகுப்பினர் அவர்கள். ஈழம் என்ற சொல்லுக்குக் 'கள்' என்று ஒருபொருள் உண்டு. தென்னை மரத்தில் இருந்து கள்இறக்கும் தொழில் செய்யும் வகுப்பினர் கேரளத்தில் ஈழவர் எனப்படுகின்றனர். இவ்வகுப்பினர் கேரள மாநிலம் முழுவதும் ஆங்காங்கு குடியிருக்கின்றனர். கேரளத்தின் ஒருபகுதியிலிருந்து இவர்கள் மாநிலம் முழுவதும் பரவி வாழ்கின்றனர் என்று கொள்வதற்கு எவ்வித சான்றும் கிடைக்கவில்லை. ஒரேவகுப்பினர் என்று ஏற்றுக்கொள்ளப்படும் மக்கள் கேரளத்திலே இன்று இருபெயர்களுடன் வாழுகின்றனர். கேரளத்தின் தென்பகுதியிலே ஈழவர் எனப்படுவோர், வடபகுதியிலே தீயர் எனப்படுகின்றனர் (V. I. Subramaniam, 1974). மலையாளமொழியிலே தீயர் என்பது தமிழிலே தீவார் என்பதற்கு நேரான சொல். கேரளத்திலே தென்னைமரத்தொழில் செய்வதற்காகத்தாம் வந்தேறிய குடிகள் என்று கூறிக்கொள்ளும் இவ்வகுப்பினர் ஈழத்திலிருந்து அல்லது தீவிலிருந்து வந்தவர்கள் என்று தம்முடைய தோற்றுவாயை விளக்குகின்றனர். ஈழம் ஒரு தீவு என்பது அவர்கள் நம்பிக்கை. ஈழவர் அல்லது தீயர் எனப்படுவோர் பல இலட்சம் மக்கட்தொகை கொண்ட வகுப்பினராகக் காணப்படுவதால், அவர்கள் இலங்கைபோன்ற பெரியதீவு ஒன்றிலிருந்தே வந்திருக்க வேண்டும். எவ்வாறு நோக்கினும் கேரளத்தில் அவர்கள் வாழ்பதி ஈழமென வழங்கப்படவில்லை யெனலாம்.

ஈழம் என்னுஞ்சொல் இலங்கை நாட்டினைத்தான் குறிப்பிடுகின்றது என்று சித்தாந்தமாகக் கொள்ளத்தக்கதா என்று பூலோகசிங்கம் வினவியுள்ளார். இலங்கைக்கு வெளியில் ஊரோ நாடோ ஈழம் எனவழங்கப்பட்டு வந்ததற்கு இதுவரையில் எந்தச சான்றும் கிடைக்கவில்லை. இடைக்காலத் தமிழ்ச் சாசனங்களிலே, 'சிங்களரீழமண்டலம்' என இலங்கை சிங்களவரோடு தொடர்புபடுத்திச் சொல்லப்பட்டுள்ளமை மறுக்கமுடியாத சான்று. உதயணன் பெருங்கதையிலே 'இலங்கையீழத்துக் கலந்தருசெப்பு' என்று காணப்படுவதனால், ஈழம் என்பது இலங்கையின் ஒரு பகுதியே என்றும் கொள்ளத்தோன்றுகிறது. கண்ணகி வழக்குரையிலே ஈழஞ் சுற்றியோடுதல் என்பது இலங்கையின் கிழக்குக் கரையைச் சுற்றியோடுதலைக் குறிக்கிறது. கிழக்கு இல்ங்கையிலே செப்புத்தாதுப்பொருள் உள்ள இடமாகத் திருகோணமலை மாவட்டம் திகழ்கிறது. ஈழம் என்ற பெயர் திருகோணமலை, வடகிழக்கு இலங்கை, முழு இலங்கைத் தீவு மூன்றுக்குமே வழங்கியிருக்கலாம் போலத் தெரியவருகிறது. இன்றைய உலகிலும் மெக்சிக்கோ முதலிய பெயர்கள் தலைநகருக்கும் முழுநாட்டுக்கும் ஒன்றேயாய் விளங்குகின்றன.

வடஇலங்கையைக் கைப்பற்றிய முதலாம் இராசராசசோழன் ஈழமண்டலத்தை வென்று விட்டதாகக் கூறியுள்ளான்; மெய்க் கீர்த்தியுடனுன அவனுடைய சாசனம் வடகிழக்கு இலங்கையிலுள்ள பதவியாவிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முழு இலங்கையையும் வெற்றிகொண்ட முதலாம் இராசேந்திரசோழன் 'ஈழமண்டலம் முழுவதும்' வென்றுவிட்டதாகக் கூறியுள்ளான். அண்மையிலே, தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50' என்ற நூலிலே பதிப்பாசிரியர் செ. இராசுவும் துணைவேந்தர் வ. அய். சுப்பிரமணியமும் சில பிரச்சினைகளை முன்வைத்திருக்கிறார்கள். நன்னூல் மயிலைநாதர் உரையிலும் அவர் எடுத்துக்காட்டிய அகத்தியச் சூத்திரத்திலும் தமிழ் நாட்டைச் சூழவுள்ள நாடுகளாகச் சிங்களமும் ஈழமும் தனித்தனியே கூறப்பட்டுள்ளன. மயிலைநாதர் யாழ்ப்பாண அரசு வலிமை மிக்கு விளங்கிய கி. பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கொள்ளப்படுவதால், இலங்கையை இரண்டு அரசுகளாகக் கொண்டது பொருத்தமே. அகத்தியர் காலம் மிகத் தொன்மையானதென்ற கருத்தினை இக்கால அறிஞர் ஏற்பதில்லை. அகத்தியரென்ற பெயர் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த அறிஞர்களுக்கு வழங்கியிருக்கிறதென்பதே இன்றைய ஆராய்ச்சியாளர் முடிபு.

16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பல தமிழ்நாட்டுச் செப்பேடுகளிலே - சிவகங்கைப் பாண்டியன், இராமநாதபுரம் சேதுபதி, தஞ்சைநாயக்கர், தஞ்சைமராட்டியர் சாசனங்களிலே - யாழ்ப்பாணமும் ஈழமும் வேறுவேறாகக் கூறப்பட்டுள்ளவென எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சிங்களத்தின் இடத்தில் ஈழமும் ஈழத்தின் இடத்தில் யாழ்ப்பாணமும் கூறப்பட்டுள்ளனவாகத் தெரியவருகிறது. ஈழம் என்ற பெயருக்குச் சிறப்புரிமை திருகோணமலைப் பகுதிக்கே உரியதெனக் கொண்டால், சிக்கல் தீரும். யாழ்ப்பாண அரசிலே திருகோணமலை அடங்கியிருந்த காலத்திலே, தமிழ் அரசு ஈழமெனப்பட்டது. திருகோணமலை கண்டியரசின் மேலாதிக்கத்துக்குட்பட்டிருந்த போது, கண்டியரசே ஈழமெனப்பட்டிருக்கிறது.

கிறிஸ்தவ ஆண்டுத் தொடக்க காலத்துக்கு முன்பின்னாக, தமிழ்க் கல்வெட்டிலும் சங்க இலக்கியத்திலும் இடம்பெறும் ஈழம் என்ற சொல் இலங்கையைக் குறிப்பதாகவே, இதுவரை விளக்கப்பட்டு வருகிறது. மதுரைக்கு அண்மையிலுள்ள

திருப்பரங்குன்றத்துக் கல்வெட்டிலே 'ஈழக் குடும்பிகன்' என்று குறிப்பிடப்படுவது ஈழம் அண்மையிலுள்ளதென்பதைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். பட்டினப்பாலையில், 'ஈழத்துணவும் காழகத் தாக்கமும்' எனவருவது காவிரிப்பூம் பட்டினத்திலே இறக்குமதியான பொருள்களைக் குறிக்கும் சந்தர்ப்பத்திலே காணப்படுகிறது. கடாரம் என்று இடைக்காலத்திலே பிரபலமான மலேசியப் பகுதி காழகமெனவும் ஈழமென்பது இலங்கையெனவும் இதுவரை கூறப்பட்டு வருகிற விளக்கம் பொருத்தமில்லை என்று கொள்வதானல், தக்க பிறிதொரு விளக்கம் முன்வைக்கப்பட வேண்டும்.

ஈழத்துப் பூதந்தேவனர் இலங்கையிற் பிறந்து வளர்ந்தவர் என்பது நிரூபிக்கப்படவேண்டும் என்று நடராசா கூறுகிருர். இலங்கை சுதந்திரமடைந்ததும், இலங்கையில் ஆக்கப்பட்ட குடியுரிமைச் சட்டம் எனக்கு ஞாபகம் வருகிறது. பாட்டன் அல்லது தந்தை இலங்கையிலே பிறந்து வளர்ந்தவரென்பதை நிரூபித்தால் இலங்கைக் குடியுரிமை கிடைக்குமெனச் சட்டம் கூறியது. பிறப்பை முறைப்படி பதியும் வழக்கம் மிகவும் அண்மைக்காலம் வரையிலே பலரால் பின்பற்றப்படாமையினலே இருபதாம் நூற்ருண்டு நடுப்பகுதியிலேயே இலங்கையர் பெரும்பாலோர் குடியுரிமை பெறமுடியாமற் போயிருக்கும். மலைநாட்டுப் பெருந்தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்குவதே சட்டத்தின் நோக்கமாதலால், மற்றவர்கள் தப்பிப்பிழைத்துவிட்டனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த புலவர் இலங்கையிற் பிறந்து வளர்ந்தது நிரூபிக்கப்படவேண்டுமென்று கூறும்போது, அக்கூற்றில் அடங்கிய கருத்து இன்னும் தெளிவாகக் கூறப்பட்டிருக்க வேண்டும்.

## வரலாற்றுத் தொடக்க காலத்தில் ஈழமும் தமிழரும்

பூலோகசிங்கம் சொல்வதையும் நடராசா சொல்வதையும் இணைத்துப் பார்க்கும்போது, சங்ககாலத்திலே இலங்கையிலே தமிழ்ப் புலமையுடையோர் வாழ்ந்திருக்கக் கூடுமென்பதை அவர்கள் ஐயப்படுவதாகத் தோன்றுகிறது. தொல்வரிவடிவவியல் (Palaeography) முறையிலே, இலங்கையிலே காணப்பட்டுள்ள மிகப்பழைய வரிவடிவத்தையும் தமிழ் நாட்டிற் காணப்பட்டுள்ள மிகப்பழைய வரிவடிவத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது, அவற்றுக்கிடையே மிகநெருங்கிய ஒப்புமை காணப்படுவதை எடுத்துக்காட்டியுள்ளேன். திராவிடமொழிகளுக்குச் சிறப்பாக உரிய ளகரம் முதன்முதலிலே ஆந்திரப் பிரதேசப் பட்டிப்புரோலுச் சாசனங்களிலே காணப்பட்டது தொடர்ந்து தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் காணப்படுகிறது. இன்றைய ஈகாரத்தின் முன்னேடிவடிவம் முதன்முதலிலே தமிழ் நாட்டிலே காணப்பட்டது, தொடர்ந்து இலங்கையிலே பயின்று காணப்பட்டுப் பின்பே வட இந்தியாவுக்குச் செல்கிறது. தமிழ்நாட்டிலே தோன்றிய 'திராவிட மகரம்' இலங்கையிலும் பல கல்வெட்டுகளிலே இடம்பெற்றுள்ளது. தொல்வரிவடிவவியல் பண்பாட்டின் ஒரு கூறு என்ற முறையில், அவ்வரிவடிவங்களுக்கிடையிலான ஒற்றுமை பண்பாடுகளுக்கிடையிலான உறவைச்சுட்டுமென்பது இக்கால ஆய்வாளர் துணிபு. மேலும், சாசனவியலும் (Epigraphy) பண்பாடுகளைத் தொடர்புபடுத்திக் காட்டுவதிலே பயன்படும் முக்கியமான துறையாகும். இலங்கையின் மிகப்பழைய சாசனங்கள் சங்ககாலத்துக்குச் சமமான காலத்திலே தோன்றியவை. அச்சாசனங்களிலே காணப்படும் தமிழ்ச்செல்வாக்குக்கு எடுத்துக்காட்டுகள் சிலவாக பருமக(ன்), ஆய், வேள், பரத(ன்) முதலிய வடிவங்களைச் சுட்டலாம். சங்க இலக்கியங்களிலே வரும் பெருமகன் என்ற சொல்லே இலங்கை முழுவதும் பரவிக் காணப்பட்ட 'பருமக' என்னும் சொல் வடிவமாகத் தோன்றுகிறது.

தமிழகத்தின் எல்லே வடவேங்கடம் முதல் தென்குமரிவரை என வரையறுக் கப்படுவதால், இலங்கை தமிழக எல்லேக்கு அப்பாலுள்ள நாடு என்பது சிலருடைய வாதம். தென்னெல்லேயாகக் குமரியை வரையறுத்தவர்கள் சங்க காலத்துக்குப் பிற் பட்டவர்களான தொல்காப்பியப் பாயிர ஆசிரியரும் இளங்கோவடிகளுமேயாவர். இவர்களுடைய காலத்திலே இலங்கையிலே சிங்களவராட்சி வலுப்பட்டிருந்ததால், எல்லே சுருங்கிவிட்டது. எனினும் 'வரலாற்று நினேவு' ( Historical memory ) இந் நூல்களுக்கு உரையெழுதியோரைக் குமரிமுனேயை எல்லேயாகக் கொள்ள இடங் கொடுக்கவில்லே. கடல்கோள்களால், தமிழ் மண்ணே இழந்துவிட்டோம் என்று அவர்கள் அங்கலாய்க்கிருர்கள். கடல்கோள் என்பதுகூட, தூரத்திலிருந்து கடல் கடந்து வந்தவர்கள் நிலத்தை அபகரித்துக்கொண்டார்கள் என்பதைக் குறிப்பதா கலாம்.

கடல்கோளால் அழிந்துவிட்ட நாடுகளாக, ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலேநாடு. ஏழ்பின்பாலேநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணகாரைநாடு, ஏழ்கு றும்பனேநாடு என்பனவற்றை அடியார்க்கு நல்லார் குறித்துள்ளார். இவையாவற் றினதும் முதலிலுள்ள அடையாகிய 'ஏழ்' என்பது எண்ணேக் குறிப்பதாகக் கொள் வது பொருத்தமிலலே. ஈழம் என்ற சொல்லின் முதல் அசையாகிய 'ஈழ்' என்பதே இங்கே 'ஏழ்' ஆக வழங்கியதெனலாம். இலங்கையின் மேற்கு, வடமேற்குப் பகுதி களே தெங்கு நாடெனவும், மதுரை மாத்தறை ஒப்புமையால் தென்பகுதியே மதுரை நாடெனவும், மத்தியமலேப்பகுதியே குன்ற நாடெனவும், முன்பாலேநாடு, பின்பாலேநாடு என்பன வன்னி, மகாவன்னியெனவும் கிழக்குப்பகுதியே குணகாரை நாடெனவும் யாழ்ப்பாணமே குறும்பனே நாடெனவும் பட்டதெனலாம். குறும்பனே நாடு என்பது பரப்பளவாலே சிறிதாகிய பனேநாடு எனவும் குணகாரை நாடு என் பது மட்டக்களப்புத்தமிழகம் என்று பலர்கொள்ளும் கிழக்கிலங்கை விவசாயப்பூமி (காரைதீவை மையமாகக் கொண்டதாக இருக்கக்கூடுமா?) எனவும் பொருள் படலாம். இந்நாடுகளோடு சேர்த்து, 'குமரி கொல்லமுதலிய பன்மலேநாடும்' கடல் கொண்டொழிந்தது என்று அடியார்க்கு நல்லார் வடவாரியர் பரம்பரையினரான நம்பூதிரிகளின் மேலாதிக்கத்துக்குட்பட்டிருந்த கேரளத்தையும் ஈழத்தையும் இணேத் துக் கூறும்போது கடல்கோள் என்ற சொல்லுக்குப் புதியபொருள் தேவைப்படுகிறது. தொல்காப்பிய உரையில், 'குமரியாறு பனேநாட்டோடு கெடுவதற்கு' என்று பேராசிரி யர் கூறும்போது பனேநாடு என்பது யாழ்ப்பாணத்தையே குறிப்பதாகலாம். 'ஈழ ராஜா' என்ற சொல்லே பாளி மொழியில் 'எலாரா' (எல்லாளன்) எனப்பட்டி ருக்கலாம்.

இலங்கை அல்லது ஈழம் என்பது பற்றிய குறிப்புகள் பண்டைத் தமிழ்ச் சான்ருதாரங்களிலே மிகவும் அருகிக் காணப்படுவதால், 'புலவர் பெயருக்கிட்டுள்ள அடைமொழியாய ''ஈழத்து'' என்ற ஒரு சொல்லே மட்டுங்கொண்டு', பூதந்தே வஞரை இலங்கையரெனச் சாதிப்பது பொருத்தமில்லேயென்பது நடராசாவின் கருத்து. இலங்கையின் பூர்வீக வரலாற்றை நுணுகி நோக்காமையினுலேயே அவர் இவ்வாறு கூறியிருக்க வேண்டும். பாளிமொழியிலமைந்துள்ள இலங்கைக் காலமுறை ஏடுகளான மகாவம்சம், தீபவம்சம் என்பன புத்தர் பரிநிர்வாணமடைந்த தினமே விசயன் இலங்கையிலே காலடி வைத்தானெனக் கூறிப் பகுத்தறிவுக்கேற்காத பல விடயங்களேக் குறிப்பிட்டுள்ள போதிலும், பௌத்த சமயம் இலங்கைக்கு வந்த கி. மு. 247 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வரலாறு நம்பக்கூடிய விதத்தில் அமை கிறது. இந்த ஆண்டைத் தொடர்ந்து வந்த குறுகிய காலத்துக்கு மௌரியப்பேர ரசின் ஆதரவு இலங்கைக்குக் கிடைத்திருக்குமாதலால், இலங்கை பாதுகாப்பாக

இருந்தது. தொடர்ந்து வரும் கி. மு. 77 வரையிலான நூற்றைம்பது ஆண்டுகள் வரலாறு நுணுகி நோக்கத்தக்கது. மூன்று முறை தமிழர் ஆட்சி ஏற்பட்டதாகவும், தமிழர் ஆண்ட காலம் எண்பது ஆண்டுகளெனவும் மகாவம்சத்தாலே தெரியவருகிறது. (சேனன், கூத்திகன் — 22 ஆண்டுகள்; எல்லாளன் - 44 ஆண்டுகள்; பாண்டியர் — 14 ஆண்டுகள்). இலங்கை வரலாற்றுத் தொடக்க காலத்திலே, நாட்டின் இறைமை தமிழருக்குரியதா, சிங்களவருக்குரியதா என்பது பிரச்சினைக்குரிய விடயமாக இருந்திருக்கிறது.

பிற்கால இலங்கை வரலாற்றை எழுதுவோர், கி. பி. 10, 11 ஆம் நூற்றுண்டிலே இலங்கையிலே தமிழராகிய சோழராட்சி நடைபெற்றதாலே தமிழ்க்குடிகள் பெருகினவென்றும் தமிழர் செல்வாக்கு அதிகரித்து வந்ததென்றும் கூறிவரக் காணலாம். இலங்கையிலே சோழராட்சி ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் தான் நிலைபெற்றிருத்தது. கி. மு. 3ம், 2ம், 1ம் நூற்றுண்டுகளிலும் தமிழர் ஆட்சி இலங்கையில் எண்பது ஆண்டுகள் நிலவியதாஞல், சங்க இலக்கியம் தோன்றிய காலத்திலே இலங்கையிலே தமிழ்ப்புலமை இருந்திருக்கவேண்டுமென்று கூறுவதும் இலங்கைத் தமிழர் ஒருவர் மதுரையிற் குடியேறித்தமிழ்ச் செய்யுளியற்றினுரெனக் கூறுவதும் தயங்க வேண்டிய விடயங்களாக எனக்குத் தோன்றவில்லை. இன்னுென்று இங்கே கவனிக்க வேண்டியது - தகராறு இருந்து உரிமை நிறுவப்படும்போது, உறுதி எழுதி வைக்கும் எண்ணம் ஏற்படுகிறது. இலங்கை வரலாற்றுத் தொடக்க காலத்தில் தகராறு இருந்து உரிமை பெற்ற சிங்களவரிடையே தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பன தோன்றின. இடைக்காலத்திலே, தகராறு இருந்து உரிமை பெற்ற தமிழரிடையே கைலாயமாலை, வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம், யாழ்ப்பாண வைபவமாலை முதலியன தோன்றின.

## ஈழத்துப் பூதந்தேவஞர் ஒருவரா?

ஈழத்துப் பூதந்தேவனுரும் மதுரை ஈழத்துப் பூதந்தேவனுரும் ஒருவரே என்று கொள்வதற்குச் சான்று எதுவும் இல்லை என்பது பூலோகசிங்கத்தின் வாதமாகும். புறச்சான்று எதுவும் இல்லை என்பது உண்மையே; அகச்சான்றுகள் உண்டா என்று பார்க்க வேண்டும். ஒப்பியல் இலக்கிய முறையில் (Comparative literature) இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணலாம். ஈழத்துப் பூதந்தேவனுர் பாடிய செய்யுள்களெனக் குறுந்தொகை 343, அகநாநூறு 88 ஆகிய இரு செய்யுள்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றுள் முதலாவது செய்யுள் பாலைத் திணையாகவும் இரண்டாவது செய்யுள் குறிஞ்சித் திணையாகவும் அமைந்துள்ளன. மதுரை ஈழத்துப் பூதந்தேவனுர் பாடிய செய்யுள்களாக ஐந்து செய்யுள்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் குறுந்தொகை 360 குறிஞ்சியாக அமைந்துள்ளது; குறுந்தொகை 189, நற்றிணை 366, அகநானூறு 231, 307 ஆகிய நான்கு செய்யுள்களும் பாலையாக அமைந்துள்ளன. எனவே, ஒருபெயரை உடையவர் பாடிய திணைகளையே மற்றப்பெயருடையவரும் பாடியிருக்கிருரெனத் தெளிவாகிறது.

ஈழத்துப் பூதந்தேவனுரின் செய்யுள்களிற் காணப்படும் சிறப்பியல்புகள் மதுரை ஈழத்துப் பூதந்தேவனுர் எனப்படுபவரின் செய்யுள்களிலும் காணப்படுகின்றனவா என்று நோக்க வேண்டும். ஒவ்வொரு வகையில் வலிமை மிகுந்த மிருகங்களாகிய யானையும் புலியும் மோதியதில் யானை வெற்றிபெற்ற காட்சி (imagery) ஈழத்துப் பூதந்தேவனுரின் மனத்திலே ஆழமாகப் பதிந்திருந்தது. யானையும் புலியும்

மோதுவது சங்ககாலப் புலவர்களுக்குப் பயங்கர அனுபவமாக இருந்திருக்கிறது. அத்தகைய மோதல்களிலே யானை வெல்வதும் உண்டு, புலி வெல்வதும் உண்டு. 'புலி கொன்ற யானை' என்பது அக்காலத்துப் பிரபலமான தொடர். அத்தொடர் யானை புலியைக் கொன்றதையும் புலி யானையைக் கொன்றதையும் குறிக்கலாம். அதனால் தொல்காப்பியர் வேற்றுமை மயக்கத்தில் தடுமாறு தொழிற்பெயருக்குத் தனிச் சூத்திரம் கூறவேண்டியேற்பட்டது. ஈழத்துப் பூதந்தேவனார் பெயரிலுள்ள இரண்டு செய்யுள்களிலும் இக்காட்சி உண்டு. மதுரை ஈழத்துப்பூதந்தேவனார் என் பவர் பாடிய அகநானூறு 307 ஆம் செய்யுளிலும் இதே காட்சி வருகிறது.

நிறப்பெய (Colour Terms) ரடைகளை எடுத்து ஆள்வதிலே ஈழத்துப் பூதந் தேவனாருக்கு ஓர்ஈடுபாடு. குறுந்தொகை 343 ஆம் செய்யுளிலே, ஈழத்துப் பூதந் தேவனார் என்பவர் வெண்கோடு, செம்மறு, கருங்கால் எனபனவற்றைக் கையாண் டுள்ளார். மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்பவர் குறுந்தொகை 189 ஆம் செய் யுளிலே வெண்தேர், பைம்பயிர், வால்வளை என்பனவற்றையும் கருந்தாள், வெண் குடை முதலியவற்றைப் பிறசெய்யுள்களிலும் கையாண்டுள்ளார். நெடும் பாட்டா னல் 15 அடிகள், குறும்பாட்டானல் 7 அல்லது 8 அடிகள் என்று ஒருவரையறை ஈழத்துப் பூதந்தேவனாரின் இயல்பு எனலாம். அகநானூற்றில் மூன்று பாடல்களில் ஒவ்வொன்றும் 15 அடி; குறுந்தொகை மூன்று பாடல்களில் இரண்டு 7 அடி; ஒன்று 8 அடி. இத்தகைய ஒப்புமைகளை நோக்கும்போது, வித்துவான் கணேசையரது ஊகம் ஏற்கக்கூடியதாகவே தெரிகிறது.

மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரை இலங்கையரெனக் கொண்ட முதல் தமிழ் அறிஞர் யாவர் என்ற வினா எழுகிறது. நான் அறிந்தவரையிலே, கவிச்சக்கர வர்த்தி கம்பர் அந்தப் பெருமைக்கு உரியவராகிறார். 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்று முதுமொழி ஒன்றுண்டு. கம்பர் தம்முடைய பரந்த கல்வியினால், பிறமொழி இராமாயணங்களிலே காணப்படாத புதுமைகளைத் தம்முடைய நூலிலே புகுத்தி யுள்ளார். போர்க்களத்திலே எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையனாய் நின்ற இராவணனைப் பார்த்து, 'இன்று போய்ப் போருக்கு நாளைவா' என்று பெருந்தன் மையோடு இராமர் கூறியது அத்தகைய புதுமைகளில் ஒன்று. இராமனுடைய பெருந்தன்மைக்கு வித்து வள்ளுவருடைய ஊராண்மைபற்றிய குறள் என்பது பண் டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கியவழி (1964). கம்பர் கையாண்ட வாக்கி யத்துக்கு வழிகாட்டி குறுந்தொகையிற் பூதந்தேவனார் (189) கையாண்ட 'இன்றே சென்று வருதும் நாளை' என்பது. மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரை இலங்கைய ராகக் கொண்டதனாலேயே, கம்பர் இலங்கைப் போர் நிகழ்ச்சியிலே, இந்தக் கூற் றினை அமைத்திருக்கவேண்டும்.

ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்தவரென நம்பிய நடேசபிள்ளை அவர் யாழ் ப்பாணத்தவராக இருக்கவேண்டுமெனக் கொண்டார். அவரை ஈழத்தவரென நம் பத் தயங்கும் பூலோகசிங்கம் அவர் இலங்கையிலே தமிழ் வழங்கும் வேறுபகுதியைச் சேர்ந்தவராகவும் இருக்கலாமெனக் கருதுகிறார். பூதந்தேவனார் செய்யுள்களைக் கொண்டு அவரின் வாழ்விடம் பற்றி ஏதாவது அறிந்துகொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும். அவர் புறத்திணைச் செய்யுள் எதுவுமே பாடாததாலும் பாடிய அகத்திணைச் செய்யுள்களிலே மதுரையையும் பாண்டியனையும் ஒன்றில் மட்டும் குறித் துப்பிற செய்யுள்களில், அத்தகைய செய்தி எதனையும் குறிப்பிடாததாலும், அவ ரின் இலங்கை வாழ் விடத்தைப் பற்றிய செய்தி கருகலாகவே காணப்படுகிறது. ஆனாலும், நாம் முழுவதாக நம்பிக்கை இழக்கத் தேவையில்லை.

## பூதந்தேவனரின் சொந்த இடம் எது?

சங்ககாலப்புலவர்கள் பொதுவாகத் தாம் அனுபவித்ததையே பாடினர்கள். பூதந்தேவனர் குறிஞ்சி, பாலை என்ற இரண்டையும் மட்டும் பாடுவதோடு நிறுத்திக்கொண்டார். அவருடைய வாழ்க்கை அனுபவம் இந்த இரண்டு நிலங்கள் சம்பந்தப்பட்டதாகவே இருந்திருக்கவேண்டும் மேலும் இவ்விடத்திலே உற்றுக் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு நானிலம் என்று உலகம் பாகுபடுத்தப்படும்போது, பாலை என்று தனிநிலம் இல்லையென்ருகிறது. நானிலங்களிலே முல்லையும் குறிஞ்சியும் கடும் வரட்சிக் காலத்திலே பாலையாகிய வடிவத்தைப் பெற்றுவிடுகிறதென்பது சிலப்பதிகாரச் செய்யுளடிகளிலே கூறப்பட்டுள்ள கருத்து. சங்ககால இலக்கியங்களிலே வரும் பாலைநில வருணனைகளைக் கூர்ந்து நோக்கிஞல், அவற்றுட் பெரும்பகுதி மலையும் மலைசார்ந்த இடமும் பற்றியனவாகக் காணப்படுகின்றன. பூதந்தேவனர் பாடிய ஐந்து பாலைத்திணைச் செய்யுள்களிலே, அகநானூறு 231 ஆம் செய்யுளில் மட்டுமே மலை. மலைசார்ந்த நிலம் அல்லது குறிஞ்நிலக் கருப்பொருள் எதுவும் இடம்பெறவில்லை என்று கூறலாம். எனவே, பூதந்தேவனரது முக்கியமான வாழ்க்கை அனுபவம் மலை நாட்டோடு சம்பந்தப்பட்டதென்று கொள்ளலாம்.

மலையும் மலைசார்ந்த நிலமும் குறிஞ்சியென்பது பொதுவழக்கு. ஆனல், வரட்சி மிகுந்த நிலையிலே. மலையும் மலைசார்ந்த நிலமும் பாலையாக வருவதைச் சான்ருேர் செய்யுள்களிலே காணலாம். ஒரேநிலம் வெவ்வேறு காலப்பகுதிகளிலே குறிஞ்சியெனவும் பாலையெனவும் பெயர் பெறுகிறதா அல்லது ஒரு நிலத்தின் வெவ்வேறு பகுதிகள் குறிஞ்சியெனவும் பாலையெனவும் பெயர் பெறுகிறதா என்பது ஒரு சிக்கல். பாலைக்குக் காலம் மிகவும்முக்கியமானது. தொல்காப்பியர் பெரும் பொழுது, சிறு பொழுது இரண்டுமே கூறியுள்ளார். பெரும்பொழுது, சிறுபொழுது இரண்டும் பொருந்திவரும் போதும், குறிஞ்சி நிலம் முழுவதும் பாலையாவதில்லை. உயர்ந்து நீண்ட மலைகளுக்கு ஒரு பக்கம் மழையில்லாத வரண்ட பாலையாகவும் ஒருபக்கம் மழைமிகுந்த வளமுள்ள குறிஞ்சியாகவும் அமைவதுண்டு. இன்றைய தமிழ் நாட்டுக்கும் கேரளத்துக்கும் இடையிலுள்ள மேற்குத் தொடர்ச்சிமலை ஒருபக்கம் பாலையாகவும் ஒருபக்கம் குறிஞ்சியாகவும் பெரும்பாலும் காணப்படுகிறது. இவ்வாறு குறிஞ்சியும் பாலையும் சந்திக்குமிடமே பூதந்தேவனர் இலங்கையில் வாழ்ந்த இடமாகலாம்.

சங்ககாலத்து இலங்கையிலே தமிழர் குடியிருப்புகள் எங்கெங்த அமைந்திருந்தன என்று அறியத் தொல்லியல் (Archaeology) உதவும். அறிவியல் முறையிலான தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்பட்டால், இலங்கையிலே பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள் பல இன்றும் வெளிப்படலாம். பெருங்கற் பண்பாடு (Megalithic culture) திராவிடருக்குரியது; கி. மு. 1000 - கி. பி. 400 வரை தென்னிந்தியாவிலே பரவிக் காணப்படுவது. சங்ககாலத்துத் தமிழர் பண்பாடு பெருங்கற் பண்பாடேயாம். இலங்கையிலே புத்தளம் மாவட்டத்திலுள்ள பொன்பரிப்பிலிருந்து கிழக்கு மாகாணத்தின் தென் எல்லையிலுள்ள உகந்தை வரையிலும் அனுராதபுரம் உட்பட வட மத்திய மாகாணத்திலுள்ள சில இடங்களிலும் பெருங்கற் பண்பாட்டுச்சின்னங்கள் கிடைத்துள்ளன. ஆனல், மேற்காட்டப்பட்ட இடங்களில் எதுவும் குறிஞ்சியும் பாலையும் மயங்கும் மலைப்பிரதேசமாகத் தெரியவில்லை. கேகாலை மாவட்டத்தின் வடஎல்லையில் உள்ள பட்டியகம்பளை என்ற இடம் குருணுகல் மாவட்டத்தின் தென் எல்லையில் உள்ளதாய்ப் பெருங்கற் பண்பாட்டுச் சின்னமுள்ளதாய்க் காணப்படுகிறது.

பட்டியகம்பளைக்கு ஒருபுறம் செழிவளமுள்ள மத்திய மலைநாடு; மறுபுறம் வரட்சி பொருந்திய மகாவன்னி. ஈழத்துப் பூதந்தேவனார் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும். இடைக்காலத்திலே தமிழ்ச் செய்யுள் மரபு பட்டியகம்பளைக்கு அயலிலுள்ள இடங்களிலே போற்றப்பட்டமைக்கு தம்பதேனியா, கோட்டகம, பண்டுவஸ்நுவர என்னும் இடங்களிலே கிடைத்த சான்றுகள் எடுத்துக்காட்டாகின்றன.

பூதந்தேவனார் என்ற பெயருக்குப் பூதன்றேவனார் என்ற பாடபேதம் காணப்படுகிறது. திரு F. X. C. நடராசா, கலாநிதி பூலோகசிங்கம் முதலியோர் பூதன்றேவனார் என்று பாடங்கொள்கின்றனர். இச் சிக்கலை விடுவிக்கப் பாடபேதத்திறனாய்வு (Textual criticism) உதவலாம். மூலபாடம் எதுவாக இருந்திருக்குமென்று தீர்மானித்தல் சுலபமன்று. பூதன் + தேவனார் = பூதன்றேவனார் என்பது தொல்காப்பியப் பொதுவிதி. தொல்காப்பியம் 350 ஆம் சூத்திரத்திலுள்ள சிறப்பு விதியால், மேற்படி புணர்ச்சி பூதந்தேவனார் என்றும் அமையலாம். இங்கே ஒரு வழி புலப்படுகிறது. சாசனக்கிளை மொழிகளின் ஆய்வு, தொல்காப்பியச் சிறப்புவிதி தமிழ் நாட்டின் தென்கோடியிலுள்ள திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கே சிறப்பாக உரியதாக இருந்தமையினையும் மேற்கில் கேரளத்திலும் கிழக்கில் மதுரை, தஞ்சாவூர் முதலிய பிரதேசங்களிலும் சிறிதளவு பிற்பற்றப்பட்டு வந்தமையினையும் காட்டுகிறது. தென்னாசியப் படத்தை நோக்கும்போது, பூதந்தேவனார் வாழ்ந்ததாக, நாங்கள் கொள்ளும் பிரதேசம் தமிழ்நாட்டின் தென்கோடியோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்திருக்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளலாம். எனவே, பூதந்தேவனார் என்ற பாடத்திற்குத் தடையில்லை.

## பூதந்தேவனார் செய்யுள்களின் காலமுறை

ஈழத்துப் பூதந்தேவனார் தாம் பாடிய ஏழு செய்யுள்களையும் காலமுறையில் (Chronology) என்ன ஒழுங்கிற் பாடினாரென்பது அடுத்து ஆராயத்தக்கது. ஈழத்துப் பூதந்தேவனார் சங்ககாலம் என்று இன்றைய அறிஞர்கள் கொள்கிற காலத்தின் எப்பகுதிக்குரியவரென்ற ஆராய்ச்சி இதுவரை தெளிவான கருத்துத்தரவில்லை. சங்ககாலத்தின் முன்னெல்லை பற்றி இன்றும் கருத்துவேறுபாடுகளுள. சங்ககாலத்தின் பின்னெல்லை கி. பி. 3 ஆம் நூற்றாண்டு என்பது அறிஞர் பலருக்கு உடன்பாடு. பூதந்தேவனார் பாடிய பசும்பூட்பாண்டியனைப் பரணர், நக்கீரர், மதுரைக் கணக்காயனார் ஆகியோரும் பாடியுள்ளனர். நக்கீரர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும் பாடியுள்ளார். அந்த நெடுஞ்செழியன் கி. பி. 210 இல் அரசுகட்டிலேறினன் (Nilakanta Sastri, 1955). தோழிகூற்றிலே தலைவனைக் குறிக்க மரியாதையொருமையை வழங்கிய பூதந்தேவனார் சங்ககாலத்தின் பின்னெல்லையான கி. பி. 3 ஆம் நூற்றாண்டுக்குரியவரென்றே கொள்ளலாம். பூதந்தேவனார் தமிழ்நாட்டுக்குப் போனதும் ஈழத்துப் பூதந்தேவனாரெனப் பட்டாரெனவும் மதுரையிலே தொடர்ந்து நீண்ட காலம் வாழ்ந்து வந்தபோது மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரெனப் பட்டாரெனவுங் கொள்ளலாம். தாம் பிறந்து வளர்ந்த ஈழத்தை மறக்கமுடியாமல், அப்பின்னணியையே இலக்கியப் பொருளாகக் கொண்டிருந்தமையால், 'ஈழத்து' என்ற அடையை அவர் கைவிடவில்லை. மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்ற பெயர் அமையமுன்பு, அவர் பாடியனவாக, இரண்டு செய்யுள்கள் - குறுந்தொகை, 343; அகநானூறு 88 - காணப்படுகின்றன. இவ்விரு செய்யுள்களுள் எது முந்தியது என்பது முதலில் நோக்கத்தக்கது.

இச்செய்யுள்களை நுணுகி நோக்கும்போது, குறிஞ்சித்திணைச் செய்யுள் தூய குறிஞ்சிப்பாவாகக் காணப்படுகிறது; பாலைத்திணைச் செய்யுள் பாலைக்குச் சிறப்பாக உரிய பிரிதலைப் பாடவில்லை; பாலைக்குரிய துணை ஒழுக்கமான உடன்போக்கையே பாடுகிறது; உரிப்பொருள் உடன்போக்காக அமைவதனால், இச்செய்யுள் பாலைத்திணையென வகுக்கப்பட்டுள்ளபோதும் இந்தச் செய்யுளிலும் குறிஞ்சிநிலப் பின்னணியே காணப்படுகிறதென்ற உண்மைகள் தெரியவருகின்றன. இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியதென்பது அகநானூற்றுப் பாடலின்துறை. இச்செய்யுளிற் கூறப்பட்டுள்ள இரவுக்குறி குறிஞ்சிக்குச் சிறப்பாக உரிய கூதிர்யாமத்தில் இடம்பெற்றிருக்கிறது. கருப்பொருள்களும் குறிஞ்சிக்குரியன:- உணு - செந்தினை; மா - புலி, யானை, பன்றி, கரடி; மரம் - மூங்கில்; செய்தி - தினைப் புனங்காவல், குறுந்தொகையிலுள்ள பாலைச்செய்யுள் தோழி கிழத்தியை உடன் போக்கு நயப்பக்கூறியதென்ற துறையில் அமைந்துள்ளது. தலைவன் குறிஞ்சிநிலத் தலைவனாகிய வரைநாடனெனப்படுகிறான். செய்யுளில் இடம்பெறும் குறிஞ்சிநிலக் கருப்பொருள்களாவன: மா-யானை, புலி; மரம்-வேங்கை; பூ-வேங்கை. இவ்விரு செய்யுள்களிலே, அகநானூற்றுப் பாடலை முதலிலும் குறுந்தொகைப்பாடலை அடுத்தும் பாடியிருக்கலாம் போலத்தோன்றுகிறது.

மதுரை ஈழத்துப் பூதந்தேவனாராக மாறியபின்பு, அவர் பாடிய பாடல்களின் காலமுறையாக, குறுந்தொகை 360, குறுந்தொகை 189, அகநானூறு 307, நற்றிணை 366, அகநானூறு 231 என்பனவற்றைக் கொள்ள இடமுண்டு. தலைமகன் சிறைப்புறத்தானாக, வெறி அஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைவி சொல்லியதென்ற துறையில், குறுந்தொகை 360 அமைந்துள்ளது. பூதந்தேவனாரின் முந்திய செய்யுள்கள் தோழிகூற்றாக அமைய, இது தலைவி கூற்றாக அமைந்துள்ளபோதும், இதுவும் குறிஞ்சித்திணைச் செய்யுளாகக் காணப்படுகிறது. குறிஞ்சியின் முதற்பொருளான மலைநாடு குறிப்பிடப்பட்டுத் தலைவனும் மலைநாடனெனப்படுகிறான். குறிஞ்சிநிலக் கருப்பொருளாக, தினைப்புனங்காவல் என்ற செய்தியும் வேலன்வெறியாட்டு என்ற தெய்வம் பராவலும் பாடப்பட்டுள்ளன. குறுந்தொகை 189 பாலைத்திணையென வகுக்கப்பட்டுள்ளபோதும், பாலைநிலத்துக்குரிய பின்னணி அங்கு இடம்பெறவேயில்லை. வினைதலைவைக்கப்பட்ட இடத்துத் தலைமகன் பாகற்கு உரைத்ததென்ற துறையையுடைய இச்செய்யுள் குறிஞ்சி நிலத்துக்குன்றிழி அருவியைப் பாடுகிறது. முன்பே குறுந்தொகை 343 ஆம் செய்யுளிலே பூதந்தேவனார் காட்டிய நிறப்பெயரடைகளிலுள்ள ஈடுபாட்டை, இச்செய்யுளிலும் புலப்படுத்தியுள்ளார்.

பூதந்தேவனார் பாடிய ஐந்தாவது செய்யுளாக, அகநானூறு 307 இருக்கலாம். இப்பாலைத்திணைச் செய்யுள், பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகனைச் செலவுவிலக்கியது என்ற துறையில் அமைந்துள்ளது. செய்யுளின் பின்னணி பெரும்பாலும் குறிஞ்சியாகவும் சிறுபான்மை பாலையாகவுங் காணப்படுகிறது. குறிஞ்சிக்கருப்பொருள்கள்: மா-யானை, புலி, கரடி; 'பெருங்கல் வைப்பின்மலை முதலா'றான பாதை குறிஞ்சிக்குரியது. பாலைக்கருப்பொருள்கள்; புள்-புறு; தெய்வம் பராவல் - கடவுள் போகிய கருந்தாட்கந்து. பூதந்தேவனாரின் ஆறாவது செய்யுளாக, நற்றிணை 366 கொள்ளப்படலாம். இப்பாலைத்திணைச் செய்யுள் உலகியல்கூறிப் பொருள்வயிற்பிரிய வலித்த நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியதென்ற துறையில் அமைந்துள்ளது. குறிஞ்சியொழுக்கத்திற்குச் சிறப்பாக உரிய கூதிர்காலத்துக்கு இங்கே பாலைக்குரிய பிரிவு சொல்லப்படுகிறது. மூங்கிலும் குறிஞ்சிக்குரியதெனலாம். முல்லைப்பூ முல்லைநிலக் கருப்பொருள். வெப்பமிகுதியாற் பாதிக்கப்படும் குறிஞ்சிநிலமும் முல்லை நிலமுமே பாலைநிலமெனப்படுகின்றன என்ற கருத்து இத்தகைய செய்யுள்களின் அடியாகவே தோன்றியிருக்க வேண்டும்.

ஐந்தாவது செய்யுளிலே தலைவியின் அங்க வருணனையிலே பூதந்தேவனுர் ஈடு பாடு கொள்வதைக் காணலாம்:-

'சிறுநுதல் பசந்து பெருந்தோள் சாஅய்
அகலெழில் அல்குல் அவ்வரி வாட' (அகநானூறு 307)

ஆருவது செய்யுளிலே, இந்த இயல்பு வளர்ந்து காணப்படுகிறது.

'அரவுக் கிளர்ந்தன்ன விரவுறு பல்காழ்
வீடுறு நுண்டுகிலூடு வந்தி மைக்குந்
திருந்திழை யல்குற் பெருந்தோட் குறுமகள்
மணியே ரைம்பான் மாசறக் கழீஇ
கூதிர் முல்லைக் குறுங்கா லலரி
மாதர் வண்டொடு சுரும்புபட முடித்த
விரும்பன் மெல்லணை யொழிய' (நற்றிணை 366)

வருணிக்கப்பட்ட அங்கங்களிலே, இரண்டு செய்யுட் பகுதிகளுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. முன்புள்ள செய்யுட் பகுதியில் இடம்பெற்ற நெற்றி வருணனை பின்புள்ள செய்யுட் பகுதியில் இடம் பெருமையும், முன்புள்ள செய்யுட் பகுதியிலே குறிப்பிடப்படாத கூந்தலின் வருணனை பின்புள்ள செய்யுட் பகுதியிலே விரிவாக இடம்பெறுகின்றமையுமே குறிப்பிடக்கூடிய வேற்றுமையாகும். முன்புள்ள செய்யுட் பகுதி காலத்தால் முந்தியதெனவும், முந்தியதை அடுத்துப் பிந்தியது பாடப் பட்டிருக்க வேண்டுமெனவுங் கொள்ளலாம்.

பூதந்தேவனுர் முதலிற் பாடியதாகக் கொள்ளப்படும் அகநானூறு 88 எவ் வாறு பிறதிணை விரவாது பல செய்திகளையும் தொகுத்துக் கூறுந் தூய குறிஞ்சிப் பாட்டாக அமைந்துள்ளதோ, அவ்வாறே அகநானூறு 231 பிறதிணை விரவாது பல செய்திகளையும் தொகுத்துக் கூறுந்தூய பாலைப்பாட்டாக அமைந்துள்ளது. தலைம கன் பிரிவின் கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியதென்பது இதன் துறை. நற்றிணை 366 இல் தலைவி கூந்தலை விரிவாக வருணித்து மகிழ்ந்த புலவர், இச்செய்யுளிலே சுருக்கமாகக் கூறுகிருர்:-

'ஆடுவண்டரற்று முச்சித்
தோடார் கூந்தன் மரீஇயோரே'.

தெய்வம் பராவல் பற்றியும் குறிப்புகள் வைத்துச் செய்யுள் செய்வது பூதந் தேவனுரின் இயல்பு என்று கூறலாம். பூதந்தேவனுரின் மூன்ருவது பாட்டாகக் கொள்ளப்படும் குறுந்தொகை 360 வேலன்வெறியாட்டுப் பற்றிக் கூறுகிறது:-

'வெறியென உணர்ந்த வேலன் நோய் மருந்து
அறியானுகுதல் அன்னை காணிய'.

தமிழ்த் தெய்வம் என்று போற்றப்படும் முருகனுடைய வழிபாட்டின் ஒரு கூருகிய வெறியாட்டு குறிஞ்சிநிலத்தில் நிலவிய ஆதிவழிபாட்டு முறையாகும்.

களவொழுக்கத்தில் தலைவனைப் பிரிந்துவருந்தும் தலைவி முருகன் குறையால் நோய் வாய்ப்பட்டுள்ளாள் என்று அறியாமையால் எண்ணும் செவிலித்தாய் வேலன் என்ற பூசாரி மூலம் வழிபாடு நிகழ்த்தி அவள் நோயைத் தீர்க்க முயலுதல் சங்ககாலக் குறிஞ்சித்திணைச் செய்யுள்களிலே பரவலாகக் கேட்கப்படும் செய்தி. அகநானூறு 307, 'கடவுள் போகிய கருந்தாட்கந்தத்து' என்று குறிப்பிடுவது திராவிடப் பெருங் கற்பண்பாட்டுக் காலத்துக்குச் சிறப்பாக உரிய நடுகல் வழிபாட்டைச் சுட்டுகிற தெனலாம்.

அகநானூறு 231 இல் காணப்படும் பகுதியும் நடுகல் வழிபாட்டோடு தொடர்புடையது:-

'கொடுவிற் கானவர் கணையிடத் தொலைந்தோர்
படுகளத் துயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை
கள்ளியம் பறந்தலைக் களர்தொறும் குழீஇ
யுள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கருங் கடத்திடை'.

பெருங்கற் பண்பாட்டிலே, பாலைநிலத்திற் பிணங்கள் அடக்கஞ் செய்யப்பட்ட முறை இங்கே கூறப்பட்டுள்ளது. பாலைநிலத்தில் ஆறலைத்தற்போது கொல்லப்பட்டவர்களின் பிணங்கள் அடுக்கப்பட்டு அவற்றுக்கு மேலே கற்குவியல் வைக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களின் தலைமயிர் வெளியே தெரிவது, அக்காட்சியை நினைத்துப் பார்ப்பவர்களை நடுங்க வைக்கிறது. இந்தக்காட்சி சங்கப் புலவர்பிறர் பாடல்களில் இடம்பெறவில்லை. இது ஈழநாட்டுக் காட்சி ஒன்றைச் சுட்டுவதாக இருக்கக்கூடும். இப்பாடலிலே, கள்ளியம் பறந்தலை பற்றிப் பேசப்படுகிறது. யாழ்ப் பாணம், மட்டக்களப்பு ஆகிய நகரங்களுக்கு அண்மையிலுள்ள கள்ளியங்காடு என்ற ஊர்ப்பெயர்களை, இத்தொடர் நினைவூட்டுகிறது. இவ்விடங்களிலே பிரபலமான மயானங்கள் அமைந்திருத்தலுங் கவனிக்கத்தக்கது.

பூதந்தேவனார் பாடிய செய்யுள்களிலே கடைசியாகப் பாடப்பட்டதெனக் கொள்ளப்படும் அகநானூறு 231, பிற்காலமொழி நடையின் இயல்பொன்றையும் பிரதிபலிக்கிறது. தலைவனைக் குறிக்கும்போது ஆண்பால் ஒருமையை வழங்குவது சங்க இலக்கியங்களிற் பயின்றுகாணும் பழைய வழக்கு. இதே வழக்குப் பூதந்தேவனாரின் செய்யுள்கள் பலவற்றிலே காணப்படுகிறது. அகநானூறு 231 இல் மட்டும் தலைவன் மரியாதை ஒருமையில் நான்கு இடங்களிலே குறிக்கப்பட்டுள்ளான். மேற்படி அகப்பாட்டு காலத்தாற் பிந்தியதாகலாமென்பதற்கு, இதுவும் சான்று.

இதே செய்யுள் பொருள்வயிற் பிரிவுக்கான காரணத்தைக் கூறுவதிலும் ஒரு தனித்தன்மை காணப்படுகிறது. உளவியல் அணுகு முறையில் (Psychological approach), இதனை நோக்கலாம். சங்ககாலப் புலவர்களுள் மிகச் சிலரே பொருள்வயிற் பிரிவுக்கான காரணத்தைச் செய்யுளிலே சுட்டிக்காட்டியுள்ளனர். தலைவன் வரைவோடு வரும்போது தலைவியின் பெற்றோருக்குக் கொடுப்பதற்கும் குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கும் பொருள் வேண்டிப் பிரிகின்றான் என்பதே அக்கால இலக்கியத்தின் பொதுவான கருத்து.

பூதந்தேவனாரின் தலைவன்,

'செறுவோர் செம்மல் வாட்டலுஞ் சேர்ந்தோர்க்கு
உறுமிடத் துய்க்கும் உதவி யாண்மையும்
இல்லிருந் தமைவோர்க்கு இல்லென் றெண்ணி
நல்லிசை வலித்த நாணுடை மனத்தர்.'

தலைவன் நல்ல புகழை விரும்பியே பிரிந்துள்ளான். பொருள் சேர்த்து வந்தால், எதிரிகள் மதித்து நடக்கவேண்டி வருமென்றும், நண்பர்களுக்கு அவர்கள் வேண்டும் போது உதவலாமென்றும் உயர்ந்த நோக்கங் கொண்டவன் தலைவன. ஈழத்தை விட்டு மதுரைக்கு வந்து குடியேறியுள்ள பூதந்தேவனார் தலைவன் என்ற பாத்திரத்திலே தம்மையே காண்கிறார் போலத் தெரிகிறது; பிறந்தகத்துப் பெருமையை விட்டுக்கொடுக்காத 'நாணுடை மனத்தர்' அவர்.

நாடுபற்றியோ, மன்னவன் பற்றியோ எதுவுங் குறியாமல் ஆறு அகப்பாடல்கள் பாடிய பூதந்தேவனார் ஏழாவது செய்யுளில் மட்டும் மதுரையையும் பசும்பூட் பாண்டியனையும் பாடியுள்ளார். பூதந்தேவனார் தாம் வாழ்ந்த மதுரையைச் செய்யுளில் அமைத்துப்போற்றச் சந்தர்ப்பங் கிடைத்ததும், மதுரையின் தனித்தமிழ்ப் பெயராகிய கூடல் என்பதனையே கையாளுகின்றார். பூதந்தேவனாரின் பெயர்க்கூறுகளான பூதன், தேவன் என்பன வடமொழி வழி வந்த, தமிழ் ஆண்பால் ஈறுகள் கொண்ட வடிவங்களாகக் காணப்படுகின்றன. ஈழத்துப் பூதந்தேவனார் காலத்துக்குச் சிறிது முன்னதாக, இலங்கையிலே வடவாரிய மொழியினர் செல்வாக்குப் பெருகிவந்திருக்க வேண்டும். அக்காலத்துச் சூழலுக்கு ஈடுகொடுப்பதற்காக, நாட்டிலிருந்த மக்கள் 'வளைந்து கொடுத்ததை' இப்பெயர் மாற்றம் உணர்த்துவதாகக் கொள்ளலாம். சங்ககாலத் தமிழ்நாட்டிலே வடவாரியச் செல்வாக்கு ஓரளவுஇடம் பெற்றதனால், வடமொழிப் பெயர்களைத் தாங்கிய சங்ககாலப் புலவர்கள் வேறுசிலரும் உளர்.

## பூதந்தேவனார் சிறப்பு

சங்ககாலச் செய்யுள்களின் இலக்கிய ரசனை (literary appreciation) அவற்றில் இடம்பெறும் குறிப்புப் பொருளைக் கொண்டும் அளவிடப்படுதல் உண்டு. குறிப்புப் பொருள் உள்ளுறையுவமை, இறைச்சிப்பொருள் என இரண்டாக அமையும். உள்ளுறையுவமையைப் பற்றி அகத்திணையியலிலும் பொருளியலிலுங் கூறிய தொல்காப்பியர் இறைச்சிப் பொருளைப் பற்றிப் பொருளியலில் மட்டுங் கூறியுள்ளார். அகத்திணையியலிலே இரண்டு சூத்திரங்கள் உள்ளுறை பற்றிக் கூறுவதால், உள்ளுறையுவமை அகத்திணைச் செய்யுளுக்கு மிகவும் உகந்ததென்பது புலனாகும். பூதந்தேவனார் தாம் பாடிய முதன்மூன்று செய்யுள்களிலும் உள்ளுறையுவமையைக் கையாண்டிருக்கிறார். அகநானூறு 88 ஆம் செய்யுளில், தினைநுகர்தற்குப் பன்றி நிமித்தம் பார்த்தே வருகையைச் செய்தேயும் கானவன் அது வருதிறமறிந்து சுடர் கொளுத்தினாற் போல, தலைவனும் பேணிவந்தானேயாயினும், அவன் வரவு வெளிப்படும் என்பது உள்ளுறை. குறுந்தொகை 343 ஆம் செய்யுளில், தன்மேற் பாய்ந்த புலியை யானை தாக்கிக்

கொன்றபோது, யானையின் வெண்கோடு செம்மறுக் கொண்டதென்னும்போது, தலைவனுக்கு வெற்றிப் புகழையுண்டாக்கி என்னும் உள்ளுறை தோன்றியது. குறுந்தொகை 360 ஆம் செய்யுளில், கொடிச்சி கைக்குளிரினின்றும் எழும் ஒலி சிலம்பினின்று எழும் ஒலிபோலத் தோன்றும் நாடனென்றது தமது மார்புதரவந்தநோய் தெய்வந்தர வந்ததெனப் பிறர் கருதுவதற்குக் காரணமான தலைவனென்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

பிரிவுப் பாலைக்குஇறைச்சிப் பொருள் சிறந்தது. அன்புறுவதற்குத் தகுவன இறைச்சிப் பொருட்கண்சுட்டப்படுதல், பிரிவால் வருந்தியபோது, வற்புறுத்தலாக முடியும். அகநானூறு 307 ஆம் செய்யுளில், அஃறிணை உயிர்களாகிய புறுக்கள் கூடப் பழக்கங்காரணமாக உறையும் இடத்தினின்றும் போவதில்லை; தன்பெடையோடு கூடி அவ்விடத்திலேயே வாழும்; உன்னிடம் அக்கெழுதகைமையும் இல்லை என்பது இறைச்சிப் பொருள். நற்றிணை 366 இல் இறைச்சிப் பொருள் இரண்டிடங்களிலே அமைந்துள்ளது. மணமில்லாத கரும்பின் மலரை வாடை தீண்டும் என்கிறது, நெஞ்சே, நிலையில்லாத பொருளை நீ விரும்பி உலாவுகின்றனை என்ற இறைச்சிப் பொருளையுடையது. வாடை வீசுதலாலே குருவியின் கூடு அசைந்து வருமாறு மூங்கில் சென்று மோதும் என்றது பொருள் விருப்பம் உன்னைத் தூண்டுதலாலே யான் வருந்துமாறு நீ என்னைத் துன்புறுத்துகின்றனை என்ற இறைச்சிப் பொருளையுடையது.

இலக்கியங்கள் மற்றவர்களால் எடுத்தாளப்படும்போது, அவற்றின் சிறப்பினை அவர்கள் உணர்ந்துள்ளனரென்பதற்கு, அது அறிகுறியாகக் கொள்ளப்படுகிறது. பண்டைக்கால, இடைக்காலப் புலவர்களின் செய்யுள்கள் இடைக்கால உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டதற்குச் சான்று கிடைத்தால், அப்புலவர்களின் பெருமைக்கு அங்கீகாரங் கிடைத்திருப்பதாகக் கொள்ளலாம். பூதந்தேவனார் நான் காவதாகப் பாடிய குறுந்தொகை 189 உரைகாரர்களாலே குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்காப்பிய முதல் உரைகாரராகிய இளம்பூரணர், 'நெட்டாறு சேறலின்றி, அணிமைக்கண் பிரியும் பிரிவு' எனத் தொல்காப்பியம் களவியல் 17 இன் உரையிற் குறிப்பர். 'நீடேன் என்ற தலைவன் நீங்கியது' என்பர் நம்பியகப்பொருள் உரைகாரர். உரைகாரர் இருவரும் சமணசமயத்தவர். பூதந்தேவனாரின் சமயம் தெளிவுபடவில்லை. புலவர் ஈழத்தவர் என்ற முறையிலே பௌத்தராக இருத்திருக்கக்கூடுமென்று சமணர் கருதியிருக்கலாம். வைதிகசமயத்தவரைப் பொது எதிரிகளாகக் கொண்ட சமணரும் பௌத்தரும் சில இடங்களிலே ஒத்தியங்கியுள்ளனர்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபு பூதந்தேவனாரிலே தொடங்கித் தொடர்ந்து வருகின்றதெனக் கூறலாமா என்பது ஒரு முக்கியமான வினா. தொடக்கம் ஈழத்துப் பூதந்தேவனாரிலே காணப்படுகின்ற தென்பது மறுக்க முடியாத உண்மை. பூதந்தேவனார் சங்ககால இறுதியிலே, கி. பி. மூன்றாம் நூற்றாண்டுவரையிலேயே வாழ்ந்தவரெனக் கொண்டாலும் அறுநூறாண்டுகள் கால இடைவெளியிலே வேறு சான்றுகள் எதுவும் இதுவரை கிடையாமையாலே, இன்று ஆராய்ச்சியுள்ள நிலையிலே, தொடர்ச்சி கூற இயலாதென்று கூறியமைவதே பொருத்தமாகும். 'ஈழத்து' என்ற அடைமொழி பெற்றிராத வேறு இலங்கைப் புலவர்களின் செய்யுள்கள் அடையாளங்காணமுடியாமற் போயிருக்கலாம். ஈழத்துப் பூதந்தேவனாரின் செய்யுள்களும் தொகை நூல்களிலே இடம்பெறாமல் இருந்திருந்தால், மறைந்திருக்கும் என்றே கொள்ளலாம். இருண்டகாலமாகக் காட்சியளிக்கும் முன்பு குறிப்பிட்டுள்ள அறுநூறாண்டுகளின் இலக்கிய வரலாறு ஒளி பெறத்தக்க சான்றுகளைத் தேடுவோமாக.

## பயன்பட்ட நூல்கள், கட்டுரைகளுட் தெரிவு செய்யப்பட்டவை.

### தமிழ்.


அம்பலவாணபிள்ளை, கு. (1932) (பதிப்பு) அகப்பொருள் விளக்கம், நாற்கவிராசநம்பி, யாழ்ப்பாணம்.

இந்திரபாலா, கா. (1970) யாழ்ப்பாண இராச்சியத்தின் தொன்மை, சிந்தனை, மலர் 3, இதழ் ; பேராதனை.

(1968) அனுராதபுரத்திலுள்ள நான்கு நாட்டார் கல்வெட்டு, சிந்தனை, மலர் 1, இதழ் 4, பேராதனை.

இராகவஐயங்கார், மு. (1961) சாசனத் தமிழ்க் கவிசரிதம், மூன்றும் பதிப்பு, மானுமதுரை.

(1964) ஆராய்ச்சித் தொகுதி. இரண்டாம் பதிப்பு, சென்னை.

இராசநாயகம், செ (1933) யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாணம்.

இரகுநாதையர், இ. சி. (1942) (பதிப்பு) செகராசசேகரமாலை, இரண்டாம் பதிப்பு, யாழ்ப்பாணம்.

இராசு, செ. (1983) (பதிப்பு) தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50, தஞ்சாவூர்.

ராஜம், எஸ் (1958) (பதிப்பு) அகநானுறு, சென்னை.

கந்தையா, வி. சீ. (1964) மட்டக்களப்புத் தமிழகம், யாழ்ப்பாணம்.

கணபதிப்பிள்ளை, பண்டிதமணி, சி. (1964) இலக்கியவழி, யாழ்ப்பாணம்.

கணபதிப்பிள்ளை, தென்புலோலியூர், மு. (1967) ஈழநாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள், சென்னை.

கணேசையர், சி. (1939) ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், சென்னை.

கவிராசர் (1968) கோணேசர் கல்வெட்டு, வை. சோமாஸ்கந்தர் பதிப்பு, திருகோணமலை.

குணசிங்கம், சி. (1973) கோணேஸ்வரம், பேராதனை.

குறுந்தொகை (1937) சாமிநாதையர் பதிப்பு, சென்னை.

சதாசிவம், ஆ. (1966) (தொகுப்பு) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், யாழ்ப்பாணம்.

சபாநாதன், முதலியார், குல. (1947) ஈழநாட்டின் பெயர்கள், ஈழமணி மலர் 1, இதழ் 1; தென்புலோலியூர் க. க. முருகேசபிள்ளை, கொழும்பு.

சாமிநாதையர், உ. வே. (1953) பெருங்கதை, கொங்குவேளிர், மூன்றும் பதிப்பு, சென்னை.

சிவத்தம்பி, கா. (1978) ஈழத்தில் தமிழ் இலக்கியம், சென்னை.
(1971) திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்படைகள், ஆராய்ச்சி மலர் 3, இதழ் 2, திருநெல்வேலி.

செகராசசேகரம் (1932) ஞானப்பிரகாசயந்திரசாலை, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.

செந்திநாதன், கனக. (1964) ஈழத்து இலக்கிய வளர்ச்சி, கொழும்பு.

தஞ்சை மகாராசா சரபோஜி சரஸ்வதிமகால் (1963) சரபேந்திர வைத்திய முறைகள், தஞ்சாவூர்.

தொல்காப்பியர் (1954) தொல்காப்பியம் மூலம், கழக வெளியீடு சென்னை.
(1952) தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருரை, கழகவெளியீடு, சென்னை.
(1952 தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை, கணேசையர் பதிப்பு, சுன்னாகம், யாழ்ப்பாணம்.

நடராசா க. செ. (1982) ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

நடராசா F. X. C. (1970) ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு, கொழும்பு.

(1962) (பதிப்பு) மட்டக்களப்புமாங்மியம், கொழும்பு.

நற்றிணைநானூறு (1962) கழகவெளியீடு, சென்னை.

பத்மநாதன், சி. (1985) இலங்கையில் இந்துமதம் – ஆரியச்சக்கர வர்த்திகள் காலம், சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், யாழ்ப்பாணம்.

பூலோகசிங்கம், பொ. (1974) ஈழத்துத் தமிழ் இலக்கியம் (பதினெட்டாம் நூற்றுண்டுவரை).
நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவுமலர், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் (இலங்கைக் கிளை), யாழ்ப்பாணம்.

பொன்னையா, ஐ. (1931 - 36) (பதிப்பு) பரராசசேகரம், பாகங்கள் 1 - 7, யாழ்ப்பாணம்.

மயில்வாகனப்புலவர் (மாதகல்) (1953) யாழ்ப்பாண வைபவமாலை குல. சபாநாதன் பதிப்பு, கொழும்பு.

முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. (1922) ஈழமண்டலப்புலவர் சரித்திரம், யாழ்ப்பாணம்.

முத்துராசகவிராயர் (19 9) கைலாயமாலை, சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை பதிப்பு, சென்னை.

வெங்கடேசஐயர், இ. (1985) சரசோதிமாலை, மூன்றும் பதிப்பு, யாழ்ப்பாணம்.

வேலுப்பிள்ளை, ஆ. (1985) கோணேசர் கல்வெட்டுப் பற்றி நுண்ணுய்வு,
சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.

வையாபுரிஐயர் (1980) வையாபாடல், க. செ. நடராசா பதிப்பு, கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

வையாபுரிப்பிள்ளை, எஸ். (1955) இலக்கிய தீபம், சென்னை.

## ஆங்கிலம்

Archaeological Survey of Ceylon Annual Report for 1956, 1957.

Ceylon Journal of Science (G) I (2); II.

Dikshit, K. N. (1973) Prehistoric civilization of the Indus Valley, University of Madras.

Indrapala, K. (1971) (Editor) Epigraphia Tamilica, Part I, Jaffna Archaeological Society.

Kanapathippillai, K (1960) A Tamil Inscription from Panduwasnuwara, **University of Ceylon Review**, Vol XVIII, No. s 3 & 4, Peradeniya.

Krishnan, K, G. (1962) Notes of the Tamil Inscription from Panduwasnuwara, **University of Ceylon Review**, Vol. XX, Peradeniya.

**Mahavamsa** (1960) ed. and translated by W. Geiger.

Navaratnam, K. (1969) **Tamil Elements in Ceylon Culture**, Tellippalai, Jaffna.

Nilakanta Sastri (1955) **A History of South India**, Madras.

Pathmanathan, S. (1978) **The Kingdom of Jaffna**, Colombo.

Paranavitana, S. (1961) **The Aryan Kingdom in North Ceylon**, Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, New Series, Vol. 7, Part II.

Raghavan, M. D. (1968) **Tamil Culture in Ceylon**, Colombo.

Rasanayagam, C. (1926) **Ancient Jaffna**, Everyman's Publishers, Madras.

Scott, Wilbur, S. (1962) (Compilation) **Five Approaches of Literary Criticism**, New York.

Social Scientists Association of Sri Lanka (1984) **Ethnicity and Social Change in Sri Lanka**, Colombo.

Subramaniam, S. V. & Madhavan, V. R. (1984) **Heritage of the Tamils-Siddha Medicine**, I. I. T. S., Madras.

Subramoniam, V. I. (1974) **Dialect Survey of Malayalam (Ezhava - Tiiya)**, Trivandrum.

University of Ceylon (1960) **History of Ceylon**, Colombo.

Veluppillai, A. (1981) Commonness in Early Old Palaeography of Tamilnadu and Sri Lanka, **Proceedings of the Vth I.A.T.R. Conference Seminar**, Madurai.

(1981) Tamils in Ancient Jaffna and Vallipuram Gold Plate, **Journal of Tamil Studies**, Vol. 19, Madras.

(1980) **Epigraphical Evidences for Tamil Studies**, I.I.T.S., Madras.

(1979, 1980) Tamil Influence in Ancient Sri Lanka with special reference to Early Brahmi Inscriptions, **Journal of Tamil Studies**, Vol. 16 & 17, Madras.

(1976) **Study of the Dialects in Inscriptional Tamil**, D.L.A., Trivandrum.

(1971, 1972) (Editor) **Ceylon Tamil Inscriptions**, Parts I&II, Peradeniya.

(1978) Language Variations in Sri Lanka Tamil Inscriptions, **Journal of Tamil Studies**, Vol. 14, Madras.

Commercial Printers 70, (30) Main Street, Jaffna.

உ



முருகன் திருவருள் வேண்டி நிற்கும்

# ரி. பி. எம். பிரதர்ஸ்

கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

---

சைவ சிற்றுண்டி வகைகளுக்கு
நாடுங்கள்

# மஹாலட்சுமி தேநீர் அகம்

கொக்குவில் சந்தி,
கொக்குவில்.